தமிழ் மானம் நிலைபெறும்!

பாராண்ட தமிழ்வேந்தர் பைந்தமிழைத் தலைவைத்தே
நீராண்ட இலங்கையினை நிழலாண்ட கதைகேட்டோம்!
நீராண்ட இலங்கையினை நிழலாண்ட கதைமாறிப்
போராண்ட செந்நிலமாய்ப் புலமாறிக் கொண்டுளதே!

தென்புலத்தார் வடபுலத்தைத் திசைவென்று கொடிநாட்டி
வன்புலத்துச் செந்தமிழை வாழவைத்த கதைகேட்டோம்!
வன்புலத்துச் செந்தமிழை வாழவைத்த கதைமாறிச்
சிங்களத்துப் புல்லியர்கைச் சிதைந்தழியக் கொண்டுளதே!

தென்னகத்துப் பெருஞ்சோழன் தேர்ந்தபடை முன்னனுப்பி
முன்னகத்துச் சிங்களரை முறியடித்த கதைகேட்டோம்!
முன்னகத்துச் சிங்களரை முறியடித்த கதைமாறி
என்னகத்துத் தமிழர்க்கே இடர்மிகுத்துக் கொண்டுளதே!

சிங்களரைச் சிதறடித்துச் சீர்த்திமிகு செந்தமிழர்
தங்களது யாழகத்தில் தனித்தரசு நாட்டுவரோ?
தங்களது யாழகத்தில் தனித்தரசு நாட்டுவரேல்
மங்கிவரும் தமிழ்மானம் மண்ணுலகில் நிலைபெறுமே!

சுவடி : 23
ஓலை : 5
விலை
உருபா: 1-75

நமக்கு வந்த மடல்கள்.

O: *1213:* அன்புள்ள அய்யாவுக்கு, வணக்கம். நலம். தாங்கள் எல்லாம் வல்ல இறைப் பேரருளால் பல்லாண்டு நலமுடன் வாழ விழைகிறேன். தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் மூன்றும் கிடைத்து வருகின்றன... ஓய்வு நேரங்களில் பழைய தென்மொழி தொகுப்புகளைப் படித்து வருகிறேன். எண்ணங்கள் தெளிவு பெறுகின்றன. மனம் தூய்மை பெறுகிறது. தமிழனின் வீர உணர்வு மீண்டும் முளைத்தெழும்புகிறது. கருத்துகளைப் பரிமாறுவதற்கு தகுந்த நண்பர்களும், துணையும் இல்லாமல் தவிக்கிறேன். என்னுள்ளேயே மேலும் மேலும் சிந்தித்து மனம் குமுறுகிறேன். தமிழ்நிலம் பொத்தக வடிவில் பொலிவுடன் வெளியிடப் பெறுவது அழகாக உள்ளது. தென்மொழி சுவடி-3-இல் வெளிவந்துள்ள ஆசிரியவுரை அறிவுக்கு விருந்தாக உள்ளது. எங்கள் செல்வன் 'அருண்மொழி' தென்மொழி முகப்பில் உள்ள சித்திரங்களைக் கண்டு "அரிமா", வேழம், தமிழ்வீரன் என்ற தமிழ்ச் சொற்களைக் கூறுகிறான். தங்களைப் புகைப்படம் மூலமாகக் காட்டி "அய்யா" என்று அழைக்கக் கற்றுக் கொடுத்துள்ளோம். 'பாணன், விறலி, முழவு' போன்ற சொற்களையும் கூறுகிறான். குறள் சொல்கிறான். தமிழ் இன, மொழி உணர்வேற்றி வருகிறேன்.

கடந்த சில திங்களாகத் தங்களைக் காண சென்னை வர இருந்தேன். இன்னும் தொழிலில் சரிவர ஓர் இடத்தில் அமையாமல் இருப்பதால் மனம் சிறிது வருந்துகிறது. எனினும் தங்களின் எழுத்துகளையும், அறிவுரைகளையும் நூலெங்கும் கண்டு, அறிந்து மனம் பண்பட்டு வருகிறது.

தாங்கள், மொழி, இன, நாடு என்னும் முப்படிகளிலும் தமிழரை உயர்த்த ஈடுபடும் பணி ஓர் அரிய முயற்சியே. ஆனால், இத் திரைப்படக் கவர்ச்சியால் மயக்குற்றுப் போதை ஏறி நிற்கும் மக்களை 24 மணி நேரங்களில், சில நிமையங்களேனும் இன உணர்வு தோன்றச் செய்வது எங்கனம்? மேலும் பொருளியல் நிலையில், முன்னேற்றம் அடையச் செய்யாமல், கீழ்த் தட்டிலுள்ள மக்களிடம் நம் செந்தமிழின் உயர்வை விளக்கினால் அவர்கள் செவிமடுப்பரோ? தனி நாடு பெற்று விட்டால், தனித் தமிழ்நாட்டின் நல்ல இலக்கு நோக்கி அழைத்துச் செல்வது யார்? இந்த ஒற்றுமை இல்லாத தமிழினை ஒருங்கிணைப்பது எப்படி? உயரிய குறிக்கோளுடன் இயங்கும் தமிழ் விடுதலைப் புலிகளிடையே பல குழுக்கள்—வேற்றுமை! அந்த நிலையே இங்கும் தோன்றலாம். இவற்றையெல்லாம் சிந்தித்து விடை கிடைக்காமலிருக்கிறேன். தங்களின் "திருக்குறள் மெய்ப்பொருளுரை" எல்லாவற்றிற்கும் வழி காட்டும் நூலாக அமையும் என்பது தேற்றம். தங்களன்பு மாணவன்,

—முதுநிலை மருத்துவர். அ. விசுவநாதன், மேட்டூர் அணை.

O: *1214:* அன்புள்ள அய்யா, வணக்கம். தென்மொழியின் தொடக்கக் காலம் முதல் இன்று வரை யானும் தமிழ் மொழி, இனப்பற்றாளன் என்ற முறையில் ஆக்கமும், ஊக்கமும்

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]

மொழி—இனம்—நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை,-முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டே யாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரனார்
ஆசிரியர்:மா.பூங்குன்றன்.க.மு; அமைச்சர்: கல்லை-அருட்செல்வன்
புரப்பாளர்கள்: தென்மொழி முல்லைவாணன், தென்மொழி ந. முத்துக்குமரனார், தென்மொழி ப. துரையரசன், தென்மொழி நா. இளமாறன், தென்மொழி பழநி-மகிழ்நன், தென்மொழி எசுஆர். பிரான்சிசு, தென்மொழி கா.இளமுருகன், தென்மொழி த. தானியேல் செபராசு, தென்மொழி அரசத் தொகையன், பாவலர். சா. சி. சுப்பையா, பாவலர். அ. பு. திருமாலனார், தென்மொழி த. அரிமா வளங்கோ; பொன். பாலகிருட்டிணன். தென்மொழி இரா. பாலகங்காதரன் (தொலைபேசி : 847829)

சுவடி 23] உ0கஅ மேழம் (ஏப்-மே-'87) [ஓலை 5

இந்தியாவில் எடுத்த எடுப்பில் பொருளியல் புரட்சியை உருவாக்க முடியுமா?

மக்களின் அனைத்துத் தேவைகளினும் முதலில், மிகவும் இன்றியமையாத தேவையாக இருப்பது பொருளியல் தேவையே! ஏனெனில் வாழ்க்கையின் அனைத்து வாழ்வியல் நலன்களுக்கும், அவற்றுக்கு அடிப்படையான அனைத்து அறிவியல் கூறுகளுக்கும் தலையாய தேவையாக இருப்பதோ பொரு-

ளியல் தேவைதான்! இதை யாரும் மறுப்பதற்கில்லை. அவ்வாறு மறுத்து, ஒரு கருத்தை வளர்த்தெடுப்பதற்கும் கூட, பொருளியல் மிக மிக இன்றியமையாதது என்பதை, மக்களினப் புரட்சியில் ஈடுபாடுடைய அனைவருமே ஒப்புக் கொண்டாகல் வேண்டும். எனவே, எந்த வீழ்ந்துபட்ட ஓர் இனத்திற்கும் அல்லது பின்தங்கிய நாட்டிற்கும் முதன்முதலில் வேண்டப் படுவது பொருளியல் புரட்சியே என்பதில் நமக்குக் கருத்து வேறுபாடு இல்லை.

ஆனால், மத ஆளுமையும் சாதி வேறுபாடுகளும், மூட நம்பிக்கைகளும், முதலாளியப் பெருக்கமும், இவற்றால் பெரிதும் பின்தங்கலும் நன்கு செழித்தோங்கி முள் காடாய் மண்டிக் கிடக்கும் இந்தியா போலும் ஒரு நாட்டில், பொருளியல் புரட்சி ஏற்படுவது அத்துணை எளிதா, இயல்வதா என்னும் சிந்தனை இக்கால் அனைவர்க்கும் தேவையான ஒன்று. மேலும், இக்காலப் படித்த இளைஞர்கள் பலர், படித்துவிட்டு வேலைவாய்ப்பின்மையாலும், பொருள் தேவை மிகுதியாலும், புத்துலக எழுச்சிப் பார்வையாலும், பொருளியல் புரட்சி என்னும் மார்க்சியக் கொள்கையால் மிகுதியாகக் கவரப்பட்டு, அங்கங்கே அணியணியாகவும் திரள்திரளாகவும், குழுக்குழுவாகவும் கூடி, வேறு எதைப் பற்றியும் சிந்தனையற்றவர்களாகப் பொருளியல் ஏற்றத் தாழ்வுகள், அயல்நாட்டு உள்நாட்டு முதலாளியச் சுரண்டல் முறைகள், குமுகாயக் கோணல் வல்லாண்மையரின் கொள்ளையடிப்புகள், தற்கால அரசியல் தில்லுமல்லுக் காரர்களின் மக்கள் வேட்டைகள், கலை, பண்பாட்டுச் சீரழிவுகள், மதமூடநம்பிக்கைகளின் அழிபாடுகள், வேர்விட்டு வளர்ந்துவரும்—வளர்த்தெடுக்கப் பெறும் சாதியக் கொடுமைகள்—ஆகியவற்றால் தாக்குண்டு, மனம் வெதும்பி, அறிவு குத்திட்டு, இவை தொடர்பான தீர்வு நூல்களைப் பலவாறு முயன்று தேடிப் படித்து, உலகிலேயே சிறந்ததும், எதிர்கால அனைத்து மக்கள் நலன்களுக்கும் அடிப் படையானதுமான, பொதுவுடைமைக் கொள்கையென்னும், மார்க்சியக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு, அஃது ஒன்றே அனைத்துச் சிதைவுகளுக்கும் ஒரே தீர்வு என்றும், உடனே செய்யப்பட வேண்டிய வழி என்றும் கொண்டு, பலவாறு எழுத்துத் துறையிலும், செயல் முயற்சிகளிலும் ஈடுபட்டுப் பல்வேறு கோணங்களில் இயங்கி வருகின்றனர். அவர்களுள் சிலர் முழுவதும் இதே சிந்தனையுணர்வுகளைக் கொண்டவர்களாகத் தங்கள் தங்கள் குடும்பங்களினின்றும், தங்களுக்கென அமைத்துக் கொள்ள வேண்டிய பிற வாழ்க்கைக் கடமைகளினின்றும் விலகித் தங்களை வேறு பிரிந்துக் கொண்டு, தனிச் சிந்தனையாளர்களாகத் தங்கள் தோள்களில் பைகளைத் தொங்கப் போட்டுக் கொண்டபடி, தங்கள் உடலியல், உளவியல் நலன்களில்கூட மிகுதியும் கருத்துக் கொண்டிலராய், சிற்றூர், நகரம் எனும் வேறுபாடின்றித் தெருத்தெருவாய், ஊரூராய், வேறு எதிலும் அக்கறையற்றவர்களாய் அலைந்து திரிந்து, ஆங்காங்கே தங்கள் முயற்சிகளுக்காட்பட்ட இளைஞர்களையும், மாணவர்களையும், தொழி

லாளர்களையும், உழவர் பெருமக்களையும், பொது மன்றங்களையும், சில தொண்டு நிறுவனங்களையும் அணுகி, மணிக் கணக்காக, நாள் கணக்காகத், தாங்கள் ஏற்கனவே, பலவாறான சிந்தனைக் கோணங்களினின்றும் வெளிப்பட்ட கொள்கை கோட்பாடுகளை எழுதி, அச்சிட்டு அணியமாகக் கையயம் வைத்திருக்கும் அரசியல், பொருளியல், குமுகாயவியல் கருத்துகளடங்கிய அறிக்கைகளையும், சிறுவெளியீடுகளையும் நூல்களையும், ஆங்காங்கே பரப்பியும், படிக்கக் கொடுத்தும் ஆதரவுகள் திரட்டுவதும், கூட்டங்கள், கலந்துரையாடல்கள் என்று மணிக்கணக்காகப் பேசுவதும் பொதுவாகவே நாம் காணுகின்ற அன்றாடக் காட்சிகளாகவே போய்விட்டன.

இவையெல்லாம், மக்கள் அறிவு வளர்ச்சியின் கூர்தல்நிலைப் படிக்கட்டுகளே! அவற்றின் முயற்சி வெளிப்பாடுகளே! இவற்றை யாரும் மறுக்கவோ தவறென்று கூறவோ, தகாவென்று தள்ளவோ, குற்றஞ்சாட்டிக் குறை சொல்லவோ தேவையில்லை. ஓரினம் தன்னை ஈடேற்றிக் கொள்ள இம் முயற்சிகள் வேண்டப்படுவனவே. ஆனால் இந்தியாவைப் பொறுத்த அளவில் இங்குள்ள குமுகாய, இழிவு மற்றும் மத, சாதிக் கீழ்மைகள் வேரோடிக் கிளைத்திருக்கும் சூழலில், முதன்முதலாக நாம் எடுத்துக் கொள்ளும் பொருளியல் புரட்சி முயற்சிகள் எந்த அளவில் வெற்றி பெறும் என்பது பற்றி நாம் கொஞ்சமேனும் சிந்தித்தே ஆகல் வேண்டும்.

முதலில் நாம் எந்த வகைப் புரட்சியைப் பற்றியும் சிந்திக்கும் முன்னர் இங்குள்ள மக்கள் நிலைகளைப் பற்றியும் இப்போதிருக்கும் அரசியல், பொருளியல் வாய்ப்புகள் பற்றியும் ஓரளவேனும் எண்ணித் தெளிவுப்படுத்திக் கொள்வது நல்லது; அவை பற்றி முறைப்படச் சிந்திப்போம்.

இங்குள்ள மக்கள் நூற்றுக்கு அறுபது பேர் அறவே எழுதப் படிக்கத் தெரியாதவர்கள். எழுத்தறிவு அற்றவர்கள். இவர்களுள் 10 விழுக்காட்டினர் கூலித் தொழிலாளிகள். மீதி 50 பேர் வறுமைக் கோட்டுக்கும் கீழே செத்துச் செத்து வாழ்ந்து கொண்டிருப்பவர்கள். இப்படிப் பட்டவர்கள் அவர்களாகவே எதையும் தெரிந்து கொள்ளவோ சிந்திக்கவோ வாய்ப்பில்லை;

ஏதோ சுற்றுத் தாக்கங்களாலும், பொதுநன்மை, மக்கள் நலம் கருதும் உண்மைத் தொண்டர்களாலும், அரசியல் போலிப் பேச்சாளர்களாலும் இவர்கள் நூற்றுக்கு ஓரிருவர் ஓரளவு சிந்திக்கத் திறன் பெற்றாலும், இவர்களைச் சிந்திக்க விடாமலும், தப்பித் தவறிச் சிந்தித்தாலும் எதுவும் கருத்துக் கொள்ளாமலும் கருத்துக் கொண்டாலும் செயல்படாமலும் தடுப்பதற்கு, இந் நாட்டில் வழிவழியாக வரும் மூடநம்பிக்கைகளும் மதச் சீரழிவுகளும் மிகுந்த வலிமை பெற்றனவாக விளங்குகின்றன; இவற்றின் கிடுக்கிப் பிடிகளிலிருந்து இவர்களை வெளியே கொண்டு வருவ-

தென்பது மிகமிகக் கடினமாகும். இவர்களுக்கு முதல் தேவை இவர்களை ஓரளவு கல்வியறிவுள்ளவர்களாக மாற்றுகின்ற முயற்சியே. இந்த முயற்சியைத் தனிப்பட்ட ஒருவரோ ஒரு கட்சியோ நிறுவனமோ செய்துவிட முடியாது. அரசுமட்டுந்தான் இவர்கள் கல்வியறிவு பெறுவதற்கான அனைத்து முயற்சிகளையும் செய்ய வேண்டும், செய்ய முடியும்.

அவ்வாறு செய்வதற்கு அது மக்கள் நலம் கருதுகிற அரசாக இருக்க வேண்டுமே! ஆனால், இங்குள்ள அரசோ குடியரசு என்று தன்னைக் கூறிக் கொண்டாலும், அடிப்படையில், பச்சை முதலாளியமும் பார்ப்பனியமும் கலந்து அமைந்த அரசே ஆகையினால், இது மக்களைச் சுரண்டி, அவர்களை அடிமைப் படுத்தி ஆளத்தான் விரும்புமேயொழிய விரும்புகிறதேயொழிய அவர்கள் வலுப்பெற்று, விழிப்படைந்து, உரிமையுணர்வு பெற்றுவிட முடியாதபடி மிக எச்சரிக்கையாகவும் கவனமாகவும் இருந்து கொண்டிருக்கிறது. இவர்கள் விழிப்படைந்து உரிமையுணர்வு பெற்றால், தங்களுடைய ஆட்சியமைப்புக்கும் வாழ்க்கைக்கும் ஊறு நேர்ந்து விடுமே என்பதால், ''இவர்கள் உயிரோடு இருக்க வேண்டும்; அதே பொழுது உரிமையோடு இருக்க விடக் கூடாது'' என்பதில் மிகவும் கண்ணும் கருத்துமாக இருக்கிறது, இந்த அரசு. இவர்கள் ஏன் உயிரோடிருக்க வேண்டுமென்று இந்தக் கொள்ளை முதலாளிய வல்லாண்மை அரசு நினைக்கிறதென்றால், இவர்கள் உயிரோடிருந்தால்தானே, பெரும்பான்மை மக்களாகிய இவர்களை ஏமாற்றி, இவர்களுக்குத் தேர்தல் சமயத்தில் ஏதேனும் நப்பாசைகள் காட்டி, அல்லது பணம் கொடுத்து, இவர்களுடைய ஒப்போலைகளைப் பெற்றுத் தங்களுடைய ஆட்சியை இவர்களால் நிலைப்படுத்திக் கொள்ளவும், தொடர்ந்து ஆளவும் முடியும். இல்லையானால் இவர்களிடையே தவிர, மற்ற பிரிவு மக்களிடையே பெரும்பான்மை ஒப்போலைகளைப் பெற முடியாதே!

T. 5846

இனி, இத்தகைய சூழலில், நாம் ஏதேனும் ஒருவகைப் புரட்சிக்கு மக்களைத் தட்டியெழுப்ப வேண்டுமானாலும், இவர்களைத்-தான் நாம் இரண்டு காரணங்களுக்காக அணுகியாகல் வேண்டும்.

ஒன்று, இவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி, அறி-வூட்டி, நம்பிக்கையூட்டி இவர்களை நம் கருத்துகளுக்கு—கொள்-கைக்குச் சார்பாக இயங்குவதற்கென ஒன்று திரட்டுதல் வேண்டும்.

இரண்டு, இவர்களை இப்பொழுதுள்ள அரசுக்கு எதிராக நிற்க எல்லா நிலைகளிலும் துணிவு கொள்ளும்படியும், அவர்கள் வாய்மாலங்களிலும், செயற்பாடுகளிலும் ஏமாறாத படியும்—நிலை நிற்கச் செய்தல் வேண்டும். இந்த இரண்டு முயற்சிகளிலும் நாம் எந்த அளவுக்கு வெற்றிபெற முடியுமோ, அந்த அளவுக்குத் தான் நாம் தொடங்கும் புரட்சியும் (அஃது எவ்வகைப் புரட்சியானாலும் கூட) வெற்றி பெற முடியும். உறுதியாகச் சொல்வ-

தானால், இவையிரண்டிலும் நாம் முழு வெற்றி பெற்றால்தான் நம் புரட்சியும் முழு வெற்றி பெற்று இப்பொழுதுள்ள ஆட்சியை நாம் மாற்றிக் காட்ட முடியும். இதற்குக் கருவிப் புரட்சியாகக் கூட நாம் திட்டமிடத் தேவையில்லை. கருத்துப் புரட்சியே போதுமானது. மக்கள் கருத்து வலுவடைந்து ஒருமுகப் படும் பொழுது கருவிகளும் பயன்படுவதில்லையன்றோ?

ஆனால், எண்ணிப் பாருங்கள். முதலில் நாம் இந்த இரண்டு முயற்சிகளிலும் முழுவெற்றி பெற முடியுமா?

இனி, முடியுமா முடியாதா என்பதைப் பற்றியெல்லாம் பார்க்க வேண்டிய தேவை புரட்சியாளன் ஒருவனுக்கு இருக்க வேண்டியதில்லை யென்றாலும், தான் தொடங்கவிருக்கும் புரட்சியின் பரிமானங்களை அவன் உணர்ந்திருக்க வேண்டும்! அதன் தொடக்கம் என்ன, எங்கே, எப்படிப் புரட்சி தொடங்க வேண்டும் என்பதையும், அதை எவ்வாறு வளர்த்தெடுப்பது—அல்லது மலர்ச்சியுறச் செய்வது-அதற்குத் தோராயமாக எத்தனைக் காலம் பிடிக்கலாம், அதற்கு என்னென்ன கருவிகள் தேவை (பொருள், ஆட்கள், போர்க்கருவிகள்—ஆகிய அனைத்தும் கருவிகளே!) அவற்றை யார் யாரைக் கொண்டு கடைப்பிடிக்கலாம் அல்லது செய்விக்கலாம்—என்பனவற்றை எண்ணிப்பார்ப்பதுவே அப்பரிமானங்கள் ஆகும். இவற்றைப் பற்றியெல்லாம் சிந்திக்காமல், தெரிந்துகொள்ளாமல், தெளிவுபெறாமல், கருவி காரணங்களைத் தேடாமல் நாம் எந்தப் புரட்சியையும் செய்துவிட முடியாது என்பதை உணர்தல் வேண்டும்.

இனி இவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவது என்றால் எப்படி? அறிவூட்டுவது எவ்வாறு? நம்பிக்கையூட்டுவது எங்ஙன்? இவர்களை நம் கருத்துகளுக்கும் செயற்பாடுகளுக்கும் கொள்கை வழி ஒன்று திரட்டுவது இயல்வதா—என்று எண்ணினால், நமக்குப் பெருமூச்சே வெளிப்படுகிறது. இப் பெருமூச்சு நாம் வெளிவிடுகின்ற வெறும் கழிவுக் காற்றன்று. கடந்த நாற்பதாண்டுகளாக நாம் உண்மையான பொதுத் தொண்டில் ஈடுபட்டுக் கொதித்துப் போன நெஞ்சாங்குலையினின்று வெளியேறும் பணியழுத்தத்தின்-எதிர்ப்புகளின் — இடர்ப்பாடுகளின்—ஏமாற்றங்களின் வெப்பச் சுமையாகும்!

இவர்களுக்கு நாம் விழிப்பூட்டுவது என்றால், அஃது அத்துணை எளிதான செயலா? இவர்களனைவர்க்கும் இல்லையென்றாலும், நம் தமிழ்த்தேசிய இனத்தைப் பொறுத்த அளவில் உள்ள சில கோடி பேர்களுக்கே, சில இலக்கம் பேர்களுக்கே என்று வைத்துக் கொண்டாலும் — அது நடக்கின்ற செயலா? இவர்களை நாம் எப்படிச் சந்திப்பது? எங்கே போய்ச் சந்திப்பது? எதன் வழியாகத் தொடர்பு கொள்வது? அப்படித் தொடர்பு கொள்வதற்கான கருவிகள் நம்மிடம் என்னென்ன உள்ளன? புதிதாக எவையெவற்றைத் தேடுவது? எப்படித் தேடுவது?

அவர்களுக்கு நம் கருத்தைச் சொன்னால் விளங்குமா? எழுதினால் படித்துக் கொள்ள இயலாதவர்களாகவன்றோ இவர்கள் இருக்கி-றார்கள். இவர்களனைவர்க்குமே நாம் கொண்ட கொள்கையினை-கூறவிருக்கின்ற கருத்துகளை—நேரிடையாகப் போய்ச் சொல்ல முடியுமா? அவ்வாறு ஒரு சுற்று இவர்களைக் கண்டு வரவேண்டு-மென்றாலும் எத்துணைக் காலம் பிடிக்குமோ! அத்துணைக் காலம் வரை நாம் நம்மை எண்ணத்தாலும், கருத்தாலும், செயலாலும் நிலை நிறுத்திக் கொள்ள முடியுமா? அதற்கெத்தனை வகையான முயற்சிகள் வேண்டும்? அப்படியே முடியும் என்றாலும் நாம் ஒருவரே அல்லது நம்மைச் சார்ந்த ஒருசிலரே இவர்களிடம் போய் வந்து உணர்வு புகட்டி அறிவூட்டிச் செயலூக்கம் தந்து விட முடியுமா?

அதற்குள் நமக்குள்ளே அகத்தும் புறத்தும் எத்தனைக் கருத்து வேறுபாடுகள் கிளர்வுறும். எத்தனைச் செயல் வேறுபாடுகள் தோன்றும். எத்தனை வகையான மெலிவுகள், சலிப்புகள், புரை-கள், புகைச்சல்கள், பொறாமைகள், போராட்டங்கள், தடை-கள், ஏளனங்கள், இகழ்ச்சிகள், இகழ்வுகள், எதிர்ப்புகள், இன்-னும் எத்தனையெத்தனை மாறுபாடுகள், நெகிழ்வுகள், தோன்-றுமே! அவற்றையெல்லாம் நாம் எப்படிச் சரிகூட்டுவது? சமன் செய்வது? நிரவல் பண்ணுவது? அதற்குள் காலமும் உடலும் நமக்கு ஒத்துழைக்க வேண்டுமே!

இனி நாம் உணர்வூட்டுதலும், அறிவூட்டுதலும் செய்தாலும் நம் மேல் அவர்களுக்கு நம்பிக்கை வரவேண்டுமே! அது வருமா? வந்தாலும் நிலைக்குமா? அவ்வாறு நம்பிக்கை வரும்படி நம்மால் நடந்து காட்ட முடியுமா? அவர்கள் உணரும்படி நம்மால் உண-ர்த்திக் காட்ட முடியுமா? அவர்கள் அறியும்படி நம்மால் அவர்-களுக்கு அறிவூட்டி விட முடியுமா? அந்த அளவில் நாம் நம்மைப் பதப்படுத்தி வைத்துக் கொண்டோமா? அல்லது நம்முடன் இப் பணிக்குவரும் நம்அன்பர்களை நாம் அணியப் படுத்திக் கொண் டோமா?

இனி நாம் இத்தகைய முயற்சிகளையெல்லாம் செய்யத் தொடங்குகையிலும், செய்ய முயலுகையிலும் நாம் செய்வ தற்கு, கூறுவதற்கு-அஃதாவது நம் கொள்கைகளுக்கு மாறானவர்-கள், வேறானவர்கள், நமக்கு எத்துனை எதிர்ப்புகள் காட்டுவர்! என்னென்ன அம் மக்களிடம் வந்து புளுகுவர்! பொய்யுரைப்பர்! நம் முயற்சிகளை முறியடிப்பதற்கு எத்தனையெத்தனைச் சூழ்ச்சி-களையும், சுழிவு நெளிவுகளையும் செய்வர்! எத்தனையெத்தனைப் பள்ளம் படுகுழிகளைப் பறிப்பர்! நம் எதிரிகள் அஃதாவது ஆட்சி யாளர்கள் நம்மைப் பார்க்கிலும் எத்துணை வலிவுடையவர்கள்! எத்துணை ஆற்றலுடையவர்கள்! எத்துணை அதிகாரமுடையவர்-கள்! எத்துணைக் கருவி, காரணங்கள் அவர்களுக்கு இருக்-கின்றன? இவற்றையும் கூட நாம் கட்டாயமாக எண்ணிப் பார்த்தாகல் வேண்டும்.

(தொடரும்)

வேறென்ன சொல்வது?

○ வட ஆர்க்காடு, நெல்லை ஆகிய மாவட்டங்கள் தனித்தனி இரு மாவட்டங்களாகப் பிரிக்கப் படும். —செய்தி.

இன்னும் யார் யார் பெயர்களையெல்லாம் மாவட்டங்களுக்கு வைக்க எண்ணியிருக்கிறார்களோ, தெரியவில்லையே!

○ வரும் மூன்றாண்டுகளில் வீடற்றவர்களுக்கு முப்பது இலக்கம் வீடுகள் கட்டித் தர தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.

—செய்தி.

முதலில் மக்கள் தாங்களே பிழைப்பைத் தேடிக் கொள்ள வகை செய்து கொடுக்கட்டும், அரசு.

○ தமிழ்மொழி உள்பட எல்லா இந்திய மொழிகளும் சமசுக்கிருதச் சொற்களை ஏதேனும் ஒருவகையில் தன்வயமாக்கிக் கொண்டிருக்கின்றன. இந் நிலையில் சமசுக்கிருதத்தைப் புறக்கணிப்பதானது இந்தியப் பண்பாட்டையே ஊறுபடுத்துவதாகும்.

—துணைக் குடியரசுத் தலைவர் இரா. வெங்கட்டராமன்.

வரலாற்றைத் தலைகீழாக்கித் திரித்துப் பேசுகிறார் திரு. வெங்கட்டராமன். சமசுக்கிருதமன்றோ அவ்வாறு மூலத்-தமிழ்மொழியில் ஊடுருவி வேறு வேறு மொழிகளாகப் பிரிந்து போகச் செய்துள்ளது. இவ்வாறு மொழித் துறையில் சமசுக்கிருதமே எல்லா மொழிகளையும் தன்வயப்படுத்திக் கொண்டுள்ளதுபோல், மதத்துறையிலும் இந்துமதமும் எல்லா மதங்களையும் தன்வயமாக்கிக் கொண்டு வளர்ந்து நிற்பதுதானே வரலாறு.

○ படைத்துறை வீரர் தேர்வில் ஊழல்கள் நடந்துள்ளன. படைத்துறையில் சேர்வதற்குக்கூட உருபா பத்தாயிரம் வரை கையூட்டுக் கொடுக்க வேண்டியுள்ளது.

—நாடாளுமன்றத்து உறுப்பினர்கள் முல்லப்பல்லி இராமச்சந்திரன், முன்னாள் அமைச்சர் ராவ்வீரேந்திரசிங்-குற்றச்சாட்டு.

இவ்வாறு நடக்கின்றவர்கள் உருபா பத்து இலக்கம் கொடுத்தால் நாட்டையே காட்டிக் கொடுக்க மாட்டார்கள் என்பதற்கு என்ன உறுதியிருக்கிறது?

○ மீண்டும் பேச்சு தொடங்க சரியான சூழ்நிலையைக் கொழும்பு உருவாக்கினால், இலங்கை அரசுடன் ஒப்புரவுப் பேச்சு நடத்த

தமிழீழ விடுதலைப் புலிகளை இணங்கச் செய்ய முடியும் என இந்தியா நம்புகிறது.

—இந்திய உயர்ஆணையர் சே. என். தீட்சித்.

இந்தியாவைக் கடந்த நான்கு ஆண்டுகளாக நம்பி நம்பித் தானே தமிழினமே அழிந்து கொண்டுள்ளது. இனியும் இந்தியாவை நம்ப வேண்டும் என்பது தற்கொலைக்கே ஒப்பானதாகும்!

0 கூவம் ஆற்றைத் தூய்மைப் படுத்த பிரிட்டீசு அறிஞர்களின் ஆய்வுக் கருத்தை தமிழக நல்வாழ்வுத்துறை அமைச்சர் கேட்டறிந்தார். —செய்தி.

முதலில் கூவம் ஆற்றைவிட நாறிக்கிடக்கும் இப்பொழுதுள்ள ஆட்சியைத் தூய்மைப்படுத்தும் முயற்சி நடக்கட்டும்.

0 வடார்க்காடு மாவட்டத்தில் முத்திரைத்தாள்(Stamp Paper) கள்ள விற்பனையைத் தடுத்தார் பெண் ஆட்சித் தலைவி மாலதி.

—செய்தி.

—இந்த நல்ல செயலுக்காக ஆட்சியில் உள்ளவர்கள் அவரை வேறு இடத்துக்கு மாற்றாமல் இருந்தால் சரி.

0 வெளி நாட்டு நன்கொடைகள், உதவிகளைத் தவறாகப் பயன் படுத்துவதைக் கடுமையாக ஒடுக்கும் ஒரு திட்டத்தை அரசு உருவாக்கி வருகிறது. —உள்துறை அமைச்சர் பூட்டாசிங்.

அஃதாவது, தவறாகப் பயன்படுத்துவது என்றால், உதவிகளை ஆளுங்கட்சியாகிய தங்கள் கட்சிக்குக் கொடுக்காமல், தங்களை எதிர்க்கின்ற கட்சிகளுக்கும் ஆள்களுக்கும் கொடுப்பது என்பதே!

தமிழை உயர்த்திடுவோம்!

-- செ. தூமணி.

கன்னித் தமிழைப் போற்றிடுவோம்;
கண்போல் அதனைக் காத்திடுவோம்!
முன்னம் தோன்றிய மொழியதுவே;
மூவா சாவா மொழியதுவே!
தன்னிக ரற்ற மொழியதுவே;
தனித்தே இயங்கும் மொழியதுவே!
பன்னூல் புதிதாய் யாத்திடுவோம்;
பாரில் தமிழை உயர்த்திடுவோம்!

இந்தியத் தேசிய இனங்களின் விடுதலை எழுச்சிகள்!

--தென்மொழி கரிகாலன்.

இந்தியா என்கிறது பல தேசிய இனங்கள், மொழிகள், கலைப் பண்பாடுகள் கொண்ட நாடு என்கிற ஒரு துணைக்கண்டம். 38-ஆவது குடியரசு நாளை மிகச் சிறப்போடு தில்லி மற்றும் மாநிலத் தலை நகரங்களில் கொண்டாடியதாகவும் இந்தியத் துணைக்கண்ட மக்கள் குடியரசு விழாவில் ஆர்வமுடன் பங்கு கொண்டதாகவும் நாளேடுகள் (இந்த இந்தியத் தேசிய முதலாளிய ஏடுகள்) கூறுகின்றன.

இதில் எத்துணையளவு உண்மைகள் உள்ளன என்பது நாட்டு மக்களுக்கே தெரியும். தில்லி நகரில் குடியரசுத் தலைவர் கொடி ஏற்றிப் படைத்துறை மதிப்புப் பெறுவதும், அதுபோல், மாநிலத் தலைநகரில், ஆளுநர்கள் அணிவகுப்பு மதிப்புப் பெறுவதும், மாவட்டத் தலைநகரில் ஆட்சித் தலைவர் கொடியேற்றுவதும், ஆண்டுதோறும் குடியரசு நாளில் நடக்கும் ஒரு சடங்கு என்றுதான் மக்கள் கருதுகிறார்களே தவிர, இஃது ஒரு தேசிய விழா, இதனைக் கண்டிப்பாக நாமும் கொண்டாட வேண்டும் என்று மக்கள் நினைக்கவில்லை. ஏதோ ஒரு சில இடங்களில் பெரிய கட்சியினர் சிலர் கூடுவதும் தேசியக் கொடி ஏற்றுவதும், 'பாரதமாதா கி ஜே' 'போலோ மகாத்மா காந்திக்கு ஜே' என்று கூச்சலிடுவதை மக்கள் ஏளனத்திற்குரியதாகத்தான் பார்க்கிறார்கள். இந்தப் பேராயக் கட்சிக்காரர்கள் 'அன்னை பாரத நாடு வாழ்க' - 'அண்ணல் காந்தியடிகள் புகழ் வாழ்க' என்று தூய தமிழில் வாழ்த்துகளை முழங்குவது கூடப் பிடிக்காத இவர்களைப் பெற்றவள், வடநாட்டு இந்திக்காரர்களுக்கு முன்துணி (முந்தானை) விரித்தாற்போல், இந்த இன இரண்டகர்கள் இந்தியிலேயே கூச்சலிடுகிறார்கள். இந்த 38-ஆவது குடியரசு நாளில் இந்தியத் துணைக் கண்ட எல்லைகளிலும் எங்குப் பார்த்தாலும் பல தேசிய இனங்களின் உரிமைக்குரல்கள் எதிரொலித்துக் கொண்டு இருப்பதை நம் செவிகளில் போர்ச் சங்காக ஒலித்துக் கொண்டு இருக்கின்றன. வடமேற்கு மாநிலமான பஞ்சாபில் தீப் பற்றி எரிகிறது. அந்தத் தீயினை அணைக்க முடியாமல் பர்னாலா அரசும், பாசிச இராசீவ் அரசும் திணறிக் கொண்டு இருக்கின்றன. அசாமில் தற்போது கண பரிசத்தின் ஆட்சி நடைபெறுவதால், அங்குக் கிளர்ச்சி சற்று அடங்கியுள்ளது. கண பரிசத்துக் கட்சி நீக்கப்படும் நேரத்தில் கிளர்ச்சிகள் வெடிக்க நீறு பூத்த நெருப்பாகக் கனன்று கொண்டு இருக்கின்றன.

வடகிழக்கில் கூர்க்கா மக்களின் தனி மாநிலக் கோரிக்கை கொண்ட கிளர்ச்சி, திரிபுர தேசியத் தொண்டர் படையின் கலகம், மணிப்பூரில் மக்கள் விடுதலைப் படைகளின் அவ்வப்போது நிகழும் தாக்குதல்கள் நடைபெறுவதுடன் நாகாலேந்தில் இன்னும் முழு அமைதி திரும்பவில்லை. நேரு காலத்திலிருந்தே நாகாலேந்து

நாடு தன்னுரிமை பெற வேண்டும் என்று கேட்டுப் போராடி வரும், நாகா கலகப் படைத் தலைவர் பிகோ இன்னும் லண்டனில் கிறித்துவ சமயத் தலைவரின் ஆதரவில் இருந்து வருகிறார். அவருடைய ஆட்கள் இன்னும் நாகாலேந்தில் மலை இடங்களில் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களைப் பிடிக்க ஒரு பகுதி படைத் துறையோ அங்கு முகாமிட்டு அவர்களைத் தேடி வருகிறார்கள். இந்தியா வலுக்குறையும் நேரத்தில் அண்டை நாடுகளின் உதவிகளைப் பெற்று நாகாலேந்தைத் தனி நாடாக்கக் கழுகு போல் நேரம் பார்த்துக் கொண்டு இருக்கிறார் நாகாப்படைத் தலைவர் பிகோ அவர்கள்.

நேற்றுவரை சண்டைக்காரர், கலகக்காரர், தேச இரண்டகர்கள் என்றெல்லாம் இந்திய ஆட்சியரால் தூற்றப்பட்டு வந்த மிசோரம் மக்கள் தலைவர் இலால்டெங்கா இருபதாண்டுகள் இந்தியப்படையை எதிர்த்துப் போராடி வந்தவர் இன்று இந்திய ஆட்சியாளரின் நண்பராகிவிட்டார். இந்திய ஆட்சியாளரும் திரு. இலால்டெங்காவைப் பெரிய தேசப்பற்றாளர் என்று புகழுகிறார்கள்.

மணிப்பூரிலும், மணிப்பூர் மக்கள் விடுதலைப் படை எனும் சிறு பிரிவு அமைத்து மணிப்பூர் விடுதலைக்குப் போராடி வருகின்றனர்.

ஆக எல்லையோரங்களிலும் எங்கும் தேசிய இனங்களின் எழுச்சிக் குரல் உலக அரங்கில் ஒலித்துக் கொண்டு இருக்கின்றது.

இந்தியப் படைத் துறையின் எண்ணிக்கை 25 இலக்கம் என்று கூறப்படுகிறது. எல்லைப் பாதுகாப்புப் படையினர் எண்ணிக்கை மூன்றே முக்கால் இலக்கம் என்றும் கூறப்படுகிறது.

எல்லைப் பாதுகாப்புப் படையினரில் முக்கால் பங்கும், ஏறத்தாழ 20 இலக்கத்திற்கு மிகுதியான படைத் துறையும் இன்று எல்லை ஓரங்களில் நிறுத்தப்பட்டு இருப்பதாலும், இத்தகைய தேசிய இனங்களின் உரிமைப் போர்கள் வெற்றி பெற இயலாமல் போகிறது. மேலும் மக்கள் தொகையில் சில இலக்கமே கொண்ட இத் தேசிய இனங்களின் உரிமைப்போர்கள் வெற்றி பெற முடியாமல் போகின்றன. இந்தத் தேசிய இனங்களின் விடுதலை வீரர்கள் சில ஆயிரம் பேர்களே ஆயினும் இவர்களின் போர் ஆற்றல் முன் இந்தியப் படையினர் திணறித்தான் போகிறார்கள். சில இடங்களில் இந்தியப் படையினர் தோல்வியைத் தழுவிக் கொள்கிறார்கள்.

இந்திய ஆட்சியை எதிர்த்து நடைபெறும் உரிமைக் கிளர்ச்சிகள் தென் கோடியில், 52 ஆயிரம் சதுரக் கற்கள் பரப்பளவில் ஐந்து கோடி மக்கள் வாழும், உலகிலேயே உயர்ந்த இனம், வளமான மொழி பேசும் தமிழ் மக்கள், இந்தியை எதிர்த்துப் பெரியதொரு கிளர்ச்சியே நடத்திக் கொண்டு இருக்கின்றனர். இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி இன்று நேற்று தொடங்கப்பட்டதன்று; 50 ஆண்டு

களாக இந்தி மொழிப் போர் நடந்து வருகிறது. எனினும் தமிழர்கள முழு வெற்றி பெற்றார்களா என்றால் அதுதான் இல்லை. அதற்குக் காரணம் தமிழகத்தில் மக்கள் சாய்கால் பெற்றுள்ள திராவிட இயக்கங்கள் தங்களின் பதவி ஆசைக் காகவே மொழிச் சிக்கலை அணுகுவதே. எனவே இந்தி வல்லாண்மை தமிழ் நிலத்தில் மிகவேகமாகப் பரவி வருகிறது.

மதிப்புமிகு ஐயா பாவலரேறு அவர்கள் தலைமையில் இயங்கி வரும் உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் கோரிவரும் இன விடுதலை அடிப்படையில் திராவிட இயக்கங்கள் போராடி இருந்தால் எப்பொழுதோ தமிழ்நாடு விடுதலை பெற்று இருக்கும். இந்திச் சிக்கலும் இல்லாமல் போயிருக்கும்.

1965-இல் தமிழ் நிலத்தில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் உச்சக் கட்டம் அடைந்தபோது தமிழ்நாடு விடுதலை கனிந்து வந்தது. கோவையில் சிதம்பரனார் திடலில் வேளாண்மைக் கல்லூரி மாணவர் மன்றத் தலைவர் இராமசாமி என்பவர் தனித் தமிழ் நாட்டுக் கொடியினை ஏற்றி வைத்துத் தமிழக விடுதலை இசைப்பா முழக்கினார். ஆங்காங்குப் பல ஊர்களில் மாணவர் தனித் தமிழ் நாட்டுக் கொடியினை ஏற்றித் தமிழ்நாட்டு விடுதலையைப் பறைசாற்றினார்கள். அந்தக் கால கட்டத்தில் மாணவ இயக்கங்கள் தமிழ்நாட்டு விடுதலையைக் கொள்கையறிவிப்புச் செய்யத் துடித்தன. ஆனால், அன்று மாணவ அமைப்பைத் தலைமை தாங்கி நடத்திச் சென்றவர்கள் திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தமையால் தமிழக விடுதலைப் பாதை நோக்கிச் சென்று கொண்டு இருந்த மாணவர் படையை வேறு திசைக்குத் திருப்பி விட்டனர். போராட்டத்தைக் கைவிடும்படி கட்டாயப்படுத்தி மாணவர்களின் உணர்வு முழுமையான இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் கூர்மையை மழுங்கச் செய்து விட்டார்கள்.

1965-இல் தமிழகத்தில் நடந்த மாபெரும் இந்தி எதிர்ப்புப் போராட்டம் மாணவர்களும், தமிழ் மக்களும் நடத்திய போராகும். மக்கள் போராட்டத்தை எதிர்கொள்ள முடியாமல் காவல் படையும் இந்தியப் பேரரசின் சிறப்புக் காவல் படையும் பின் வாங்கின. மக்கள் நடத்தும் மிகப் பெரிய கிளர்ச்சியினைக் கடக்க இயலாமல், அன்றிருந்த பக்தவத்சலம் தலைமையிலான பேராயக் கட்சியின் ஆட்சி செயலற்ற நிலையில் இந்திய ஆட்சியின் படைத்துறையினரை உதவிக்கு அழைத்தது.

சென்னை, கோவை, மதுரை, பொள்ளாச்சி, திண்டுக்கல், திருச்சி போன்ற நகரங்களில் மாணவர் படைக்கும் இந்தியப் படையினருக்கும் கடும் போரே நடைபெற்றது. காவல் படையும், படைத்துறையும், மக்களையும் மாணவர்களையும் கண்ட கண்ட இடங்களில் குருவிகளைச் சுடுவதுபோல் சுட்டுத் தள்ளினார்கள். அந்தப் அறப்போரில் மாணவர்களும், இளைஞர்களும் நூற்றுக்கணக்கானவர்கள் அமுக்கிச் சூட்டுக்குப் பலியானார்கள்

தோராயமாக இரண்டாயிரம் பேர்களுக்கு மேல் மாணவர்கள் இளைஞர்கள் இறந்து இருப்பார்கள் என்று அதிகார முழுமையற்ற செய்திகள் கூறின. ஆனால் அன்றைய அரசோ 50 பேர் மட்டுமே இறந்தார்கள் என்று கூறியது.

எனவேதான் 1967-ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் பேராயக் கட்சி படுதோல்வி அடைந்தது. தோல்வி மட்டுமன்று தமிழகத்தில் மீண்டும் அ'து உயிர்த்தெழ முடியாத அளவிற்குச் சாவு அடி கொடுத்தார்கள், தமிழக மக்கள். திராவிட இயக்கங்களின் உதவியின்றித் தான் எழுந்து தமிழகத்தில் நடமாட முடியாது என்று தெரிந்தும் நடுவணரசில் தன் கட்சி ஆட்சி நடக்கிறது என்பதாலும் அதிகாரம் தன்னிடம் இருக்கிறது என்ற தன் முனைப்பாலும் தமிழகப் பேராயக் கட்சியினர் தமிழகத்தில் நவணரசின் இந்தித் திணிப்புக்குப் பச்சை கொடி காட்டுவதும், மலர் தூவி வரவேற்பதும், தமிழின விடுதலைக்குப் பகையாக இருப்பதும் ஆகிய செயல்களால் தமிழ் மக்கள் அவர்களை என்றும் உறுதியாக மன்னிக்க மாட்டார்கள். எதிர்காலத்தில் தமிழ் நிலத்தில் பேராயக் கட்சி அடிச்சுவட்டையே துடைத்தெறிவார்கள் எம் தமிழ் மக்கள். 1967-இல் பேராயக் கட்சி தோற்று அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் சீரிய ஆட்சி ஏற்பட்டது. அறிஞர் அண்ணா அவர்கள் தந்தை பெரியாரை விட்டு விலகாமல் இருந்திருப்பின் இந் நேரம் தமிழ்நாடு விடுதலை பெற்ற தனி நாடாக உலக ஒன்றியத்தில் உறுப்பாண்மை பெற்று, உலக ஒன்றிய நாட்டு கொடிகளில் தமிழ்க்கொடியும் பட்டொளி வீசிப் பறந்து கொண்டு இருக்கும். இக் கருத்தினை 1986 திசம்பர் திங்கள் 27-28-ஆம் நாள்களில் சென்னையில் தந்தை பெரியார் திடலில் 'உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்' நடத்திய 'தமிழின எதிர்காலத் தீர்மானிப்புக் கருத்தரங்கின்' இறுதி நாள் கூட்டத்தில், நமது மதிப்புமிகு அய்யா பாவலரேறு அவர்கள் மிகமிக வருத்தத்துடன் கூறினார். அவருடைய வருத்தத்தில் எத்துணை ஆழம் இருக்கிறது என்பதை இன்றையத் தமிழர்கள் எண்ணிப் பாராமல் இருப்பதுதான் மிக வருத்தமாக உள்ளது. பதவி-பணம் - பட்டம் இவற்றை எல்லாம் தூசாக எண்ணித் தமிழின நலத்துக்காகவே பாடுபடும் நமது ஒப்பற்ற தலைவர் அய்யா அவர்களின் கைகளில்தாம் தமிழினத்தின் எதிர்காலமே இருக்கிறது என்பதை விரைவில் தமிழகம் உணரத்தான் போகிறது.

அறிஞர் அண்ணா அவர்களிடத்தில் அய்யா அவர்கள் வருத்தப் படுவது போன்று குறைகள் இருப்பினும் அண்ணா அவர்களின் இரண்டாண்டு ஆட்சிக் காலத்தில் தமிழினத்துக்கு இரண்டு பெரிய நற்பணிகள் ஆற்றினார்கள்; ஒன்று, 1968-இல் சென்னை மாகாணம் என்று இருந்த நமது தமிழ் நிலத்துக்குச் சட்ட மூலமாக வான்புகழ் 'தமிழ்நாடு' எனப் பெயர் சூட்டியது. இரண்டாவது, இந்தியப் பேராட்சியில் தமிழ் மக்களை இரண்டாந்தரக் குடிகளாக்கும் இந்தி எனும் நஞ்சைத் தமிழக அரசு பள்ளியிலிருந்து

ஒரு கருத்து மடல்:

மறைக்கப்படும் தமிழன் குரல்!

துக்ளக் 1-12-86 மற்றும் 15-12-86 இதழ்களில் தமிழ் மொழிக் கொள்கையில் குழப்பம் கண்டேன். தமிழன் என்ற முறையில் என் கருத்துகளைத் தெரிவிக்கிறேன்.

மொழிச் சிக்கலில் ஓர் அனைத்து இந்தியக் கட்சியின் கொள்கை தெளிவற்றதாய்க் காணப்படுகிறது. இந்தி தேசிய மொழி, மும்மொழித் திட்டம் தேவை என்று கூறிக் கொண்டு ஒரு மொழியைப் படிக்கக் கட்டாயப் படுத்தக் கூடாது என்பதன் பொருள் என்ன? இந்திய அரசியல் அமைப்புப்படி ஆங்கிலத்தை ஆட்சி மொழியாய்ப் பயன்படுத்த வேண்டிய காலக்கெடு முடிந்து விட்டது. இனி இந்திதான் ஆட்சி மொழி. நடுவண் அரசின் துறைகள் அனைத்தும் இந்தியில்தான் செயல்படும். இந்த நிலைமையில் படிக்கக் கட்டாயம் இல்லை என்பது ஏமாற்றுச் செயல் அல்லவா?

அன்பர் திரு. க. திருநாவுக்கரசு அவர்களின் கருத்துகளை வெளியிட்டிருக்கிறது அந்த இதழ். ஆனால் அடுத்த இதழில் ஐ. ஏ. எசு. தேர்வுகள் தமிழிலும் எழுதலாம், நேர்முக ஆய்வு (இண்டர்வியூ) தமிழில் நடத்த வேண்டும் என்று ஒருவர் கேட்டுக் கொள்ளலாம். இப்படி வாய்ப்புகள் இருந்தும் தமிழில் எழுத ஒருவரும் முன்வர வில்லை; அதற்கு நடுவண் அரசு என்ன செய்யும் என வினவியுள்ளது அவ்விதழ். தேர்விற்குச் செல்லும் மாணவன் எப்படியாகிலும் ஒரு வாய்ப்புக் கிடைக்குமா என்றுதான் பார்ப்பானேயன்றித் தமிழில் நடத்து என்று முரண்டு செய்ய முடியுமா?

இருபது ஆண்டுகளுக்கு முன் தமிழக மாணவர்கள் சிறந்து விளங்கினார்கள். இன்று தரம் தாழ்ந்து விட்டது என்கிறார்கள். தரம் தாழ்ந்து விட்டது என்பது உண்மையே. ஆனால் அந்நிலை தமிழகத்தில் மட்டுமன்று. இந்தியா முழுமையிலும் அதே நிலை தான். ஆனால் அனைத்து இந்திய அளவிலான முன்கலைக் கழகத் (மெட்ரிக்குலேசன்) தேர்வில் தமிழக மாணவர் முதல் நிலை, பல்வேறு விளையாட்டுத் தேர்வுகளில் தமிழன் முதல் நிலை என்பன போன்ற செய்திகள் செய்தித்தாள்களில் வருகின்றன. எல்லா மாநிலங்களிலும் கல்வித் தரம் உயர்த்தப்பட வேண்டும். உயர் பதவிகளுக்கு மாநிலத்திற்கு இவ்வளவு என்ற பங்கீடு (கோட்டா)

(முன் பக்கத் தொடர்ச்சி)

நீக்கியது. இரண்டு நிகழ்ச்சிகளும் தமிழக வரலாற்றில் பொன் எழுத்துகளால் பொறிக்கப்படவேண்டிய நிகழ்ச்சிகளாகும்.

1967 - இலிருந்து இன்று வரை தமிழ் நிலத்தைத் திராவிட இயக்கங்கள்தாம் ஆட்சி நடத்திக் கொண்டு இருக்கின்றன. இவர்களின் இருபதாண்டு ஆட்சியில் தமிழினம் பெற்ற நன்மைகள், உரிமைகள் எத்தனை என்று இன்றைய தமிழ் மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

(தொடரும்)

வைத்துத் தேர்வு செய்தால் தமிழக மாணவர் அனைவரும் தமிழே விரும்புவர். தமிழில் எழுதினால் வெற்றி பெற வாய்ப்பு இல்லை என்ற நிலையில் தமிழில் எழுத எப்படி முன்வருவார்? மாவட்ட வாரியாக மாநில வாரியாகச் சிறந்த மாணவர்களைத் தேர்வு செய்து பின் அவர்கள் பணியாற்ற வேண்டிய மாநில மொழியில் பயிற்சி அளிக்கலாமே.

குழப்ப நிலை: மொழிக் கொள்கையில் ஓர் அனைத்து இந்தியக் கட்சியின் கருத்து தெளிவு அற்றதாய்க் காணப்படுகிறது. ஆனால் தலைவர் இரா. செழியன் அவர்களின் 'தாய் மொழிக்குத் தனி இடம் இருக்கிறது. உலகை அறிந்து கொள்ளவும் அறிவியல் தொழில் நுட்ப முறைகளை மேற்கொள்ளவும் இன்றியமையாததாகிய ஆங்கிலத்தை விட்டுவிடுவது நல்லதன்று' என்ற கருத்துகள் சிறப்பானவை. இதனையே இன்றைய தமிழ் மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

''வேற்று மொழியைப் படித்து அதனுடன் கலந்து விடுவதாலே அறிவின் வளர்ச்சி குன்றிவிடாது'' என்பதும் ஒரு குழப்ப நிலையே. வேற்று மொழியுடன் கலந்து விட்டால் பின் தாய் மொழி ஏது? இரண்டாயிரம் ஆண்டுகளாகத் தமிழ்மொழி வடமொழி வல்லாண்மையால் தாக்கப்பட்டு வருகிறது என்பதையும் ஆரியம்வருமுன் இமயம் வரை வழங்கிய மொழி தமிழே என்பதையும், கன்னடம், தெலுங்கு, மலையாளம் ஆகிய திராவிட மொழிகள் தமிழ் மொழி மீது வடமொழி செலுத்தின ஆளுமையால் தோன்றியவை என்பதையும் உணர்ந்து கொள்வது நன்றாகும். மலையாள மொழி அகராதி, தமிழ் என்ற சொல்லுக்கு திரவிட மொழிகள் தோன்றுமுன் வழக்கில் இருந்த ஒரே மொழி என்று விளக்கம் தருகிறது.

''செய்தியைச் சுமந்து செல்வதுதான் இந்தி மொழியின் வேலையே தவிர தமிழ் மொழியை அழிப்பது அவர்கள் வேலை அன்று என்பதும் ஒரு குழப்ப நிலையே. சில வைப்பகங்களில் செலுத்துப் படிவம் (சலான்) கூடத் தமிழில் இல்லை. முகாமையான துறைகள் அனைத்தும் நடுவண் அரசின் துறைகளே. நடுவண் அரசின் ஆட்சி மொழி இந்திதான். இந்தி மொழியினால் தமிழ் மொழி பயன் அற்றதாகிறது. செய்தியைச் சுமந்து செல்வதுதான் வேலை என்றால் தலைமை அலுவலகத்தில் மொழிபெயர்ப்பாளரை வைத்து மொழி பெயர்த்து அனுப்பலாமே. அடிமட்டம் வரையிலும் அன்றே இந்தி மொழி பரவியுள்ளது.

தேசியக் கண்ணோட்டமே கொண்ட பெரியவர் மதுக் கொள்கையில் தமிழ் நாட்டை தனிமைப் படுத்திச் சிந்திப்பது வியப்பானதே! இதுவும் ஒரு குழப்ப நிலையே.

தெளிவு தேவை: இன்றைய இந்திய மக்களின் முதற்பணி நாட்டின் ஒற்றுமையைக் காப்பதேயாகும்—என்றால் ஒற்றுமைக்கு ஊறு செய்வது இந்தி ஒன்றே. இந்தி மாநிலங்களில் மட்டும்

இந்தி உலவுமானால் ஒற்றுமை உணர்வு தானகத் தோன்றிவிடும். இந்தி தமிழகத்தில் திணிக்கப் படவில்லை என்று கூறுவீர்களாயின், அது முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பதை ஒத்ததே யாகும்.

இந்தியின் தாக்கம் : இன்றைய அரசியல் பதிவின்படி நடுவண் அரசின் ஆட்சிமொழி இந்திதான். இந்திய அரசு ஆட்சிக் குட்பட்ட செயல்களை 208 பிரிவுகளாக (Subjects) வகுத்துள்ளனர். அதில் முகாமையான 96 பிரிவுகள் நடுவண் அரசின் பட்டியலைச் சார்ந்தவை. மாநிலங்களுக்குரியவை (State list) 56. மாநில, நடுவண் அரசுகட்குப் பொதுவான(Concurrent) பட்டியலில் 47 பிரிவுகள். மொத்த பிரிவுகள் 208-இல் மாநிலத்திற்கென்று ஒதுக்கப்பட்டவை 65 மட்டுமே. அவற்றையும் கண்காணிக்கும் உரிமை நடுவண் அரசிற்கு உண்டு. இந்த நிலைமையில் இந்தி திணிக்கப் படவில்லை என்றால் தமிழன் நம்ப வேண்டுமா?

மாணவர் மயக்கம் : பள்ளிகளில் இந்தியைக் கட்டாயப் பாடமாக்கினல் அனைவருக்கும் வேலை கிடைக்கும் என்ற மயக்கம் மாணவர்களிடையே ஒரு சாராரிடம் காணப் படுகிறது. இந்தி படித்தால் வேலை கிடைக்கும் என்பது ஏமாற்று வேலை. 'தட்சிண பாரத இந்தி பிரசார சபை' மூலம் ஆண்டு தோறும் தமிழகத்திலிருந்து இருபத்தையாயிரத்திற்கும் குறையாத மாணவர்கள் பட்ட நிலையில் இந்தியில் தேர்வு பெறுகின்றனர் என்று அறிக்கை கூறுகிறது. அண்மை ஆண்டுகளில் தொகை மிகுந்துள்ளது. இன்று தமிழகத்தில் இந்தி படித்தவர்கள் பல இலக்கம் பேர் உள்ளனர். இந்தி படித்தவர்களுக்கு இந்தி மாநிலங்களில் வேலை கொடுப்பதுதானே. இந்தி படித்த தமிழக மாணவர்கட்குப் பிற மாநிலங்களில் வேலை கொடுக்கட்டும். பிற மாநிலங்களில் வேலை உறுதி என்றல் இந்தி படிக்கத் தடை இராது. தமிழகத்தில் வாழ இந்தி கட்டாயம் தேவை என்றல் தமிழா நீ அடிமை என்றுதான் பொருள். மகாத்மா காந்தியால் கூட வேறெரு மொழியைக் கற்க முடியவில்லை. வாணளை வீணாக்கி இந்தி படிக்கத் தேவை இல்லை.

நடுவண் அரசிற்கான தேர்வுகளை மாவட்ட மாநில அளவில் எடுத்துத் தேர்வு செய்யப் பெற்றவர்களுக்குத் தேவையான மொழிப் பயிற்சி அளித்தால் போதுமானது என்று நெறி செய்யலாம். வணிகம் மற்றும் பிற வினைகளுக்காக வெளி மாநிலங்களுக்குச் செல்ல நேர்ந்தால் தனியாய்ப் படித்துக் கொள்ள வசதிகள் எங்கும் உண்டு.

இராசாராம் மோகன்ராயின் மொழிக் கொள்கையினை எண்ணிப் பார்ப்பது நலம். நிறைவான மொழி உலகில் இல்லை. ஆங்கிலத்தில் ந, ண, ன் ஆகிய மூன்று ஒலிகட்கும் ஒரே 'N' தான் உள்ளது. ல, ள, ழ ஆகிய மூன்று ஒலிகட்கும் 'L' மட்டுமே உள்ளது. இந்தியில் ற, ன, ள, ழ, எ, ஒ ஆகிய எழுத்துகள் இல்லை.

எனவே பல்லாயிரம் தமிழ்ச் சொற்களை எழுத இந்தியால் முடியாது. தமிழ் மொழிக்கும் எழுத்துச் சீர்திருத்தம் தேவை. இந்நிலைமையில் ஒரு மொழியை மட்டும் பழித்தல் வேண்டா.

உறுதி கொள்வோம் : இன்று அனைத்துச் செயல்களும் உலகப் பிரிவுகள் (World Subjects) ஆகி வருகின்றன. அறிவியலும் தொழில் நுட்பமும் இன்றியமையாதவை. அதற்கு ஆங்கிலம் இன்றியமையாதது. தாய் மொழியும் ஆங்கிலமும் போதுமானது. மூன்று மாநிலங்களுக்கு மட்டுமே உரிய மொழியை மீதி பதினேழு மாநில மாணவர்களும் கற்று வாழ்நாளை வீணாக்க வேண்டும் என்பது என்ன நேர்மை. இந்தியைப் பரப்பப் பதினையாயிரம் கோடிக்குமேல் செலவு செய்யப் பட்டுள்ளது. ஏழை மக்களின் வரிப்பணம் அத்தனையும் வீண். இந்தப் பணத்தை வேனிற்காலத்தின் இமயத்தின் பனி நீரைக் குமரி வரைக் கொண்டுவரக் கால்வாய் அமைக்கச் செலவு செய்திருந்தால் நாட்டின் வறுமை அகன்றிருக்குமே.

மாநில மொழிகளே அந்தந்த மாநிலங்களின் ஆட்சி மொழி என்றும், நடுவண் அரசின் ஆட்சி மொழியும் உலகத் தொடர்பு மொழியும் ஆங்கிலம் என்றும் சட்டம் செய்து மாநிலங்களின் உரிமைகளும் பேணப்பட்டால் ஒற்றுமை தானாகவே வந்துவிடும். பிணக்கு அகன்றுவிடும். தமிழ்மொழியைப் பழிப்பதையும், தமிழர்களைக் குழப்புவதையும் விட்டுவிடுங்கள் என்று அன்பாய் வேண்டுகிறேன். —ஞான தோமா, திருநெல்வேலி-7

இந்தியத் தேசியமும் திராவிடத் தேசியமும்

0 இந்தியத் தேசியமும் மாயை! திராவிடத் தேசியமும் மாயை! தமிழ்த் தேசியந்தான் மெய்யானது! எனவே தமிழக இளைஞர்கள் இந்திய, திராவிட மாயைகளிலிருந்து விடுபட்டுத் தமிழ்த் தேசிய இன விடுதலைக்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என்பதை ஆயிரக்கணக்கான வரலாற்றுச் சான்றுகளுடன் தம் நுண்மாண் நுழைபுலத்தால் விளக்குகிறார் இதன் ஆசிரியர்-

பேரறிஞர் குணா.

420 பக்கங்கள். விலை : உருபா 25. சலுகைவிலை உரு. 20

தாமரை கலை இலக்கிய மன்றம்

16, சபாபதி தெரு, (காமராசர் சாலை குறுக்கு) பெங்களூர்-1

இரண்டு கருத்து மடல்கள்!

1. 'வர்க்கப்' போராட்டமும் போராட்டப் பெருநடையும்!

பேரன்பிற்கும், பெருமதிப்பிற்கும் உரிய ஐயா அவர்களுக்கு, வணக்கங்கள். தென்மொழி சுவடி 23, ஓலை 4-இதழைப் பார்த்தபின் இரு காரணங்களுக்காக இம் மடலை எழுதுகிறேன். ஒன்று—ஆசிரியவுரைக் கருத்திற்காகவும், மற்றொன்று இதழின் 8-ஆம் பக்கத்தில் வெளியாகியிருந்த பெரு நடைப் போராட்ட விளம்பரத்திற்காகவுமே!

ஒன்று, ஆசிரியவுரையைப் பொறுத்த அளவில் 'தமிழுணர்வு இல்லாதவர்கள் தமிழினத்திற்கு உதவ முடியாது!'—என்பது பொது உண்மையானாலும், தமிழக மக்கள் விடுதலை என்பது வெறுமனே, தமிழினத்திற்கு உதவுவதாக இருக்க முடியாது. வெளிநாட்டு, இந்தியத் துணைக் கண்டத்துத் தமிழ்த் தேசிய முதலாளிகளின் சுரண்டல்களிலிருந்தும்' சாதி, மத நச்சுகளிலிருந்தும் இத் தமிழக மக்களை மீட்டெடுப்பது என்பதை வெறுமனே 'உதவுவது'—எனும் சொல்லில் தாங்கள் குறிப்பிட்டது, சீர்திருத்தப் பணிக்குரிய இலக்கணமாக அமைகிறது.

—மேலும் அனைத்து நிலைகளிலும் அடிமைப்பட்டு உழன்று கொண்டிருக்கும் இத் தமிழகம், முழுமையாகத் தனி நாடாக விடுதலை பெறுமல், எந்தவொரு சிறு நடைமுறை மாற்றத்தையும் நாம் எண்ணும் கோணத்தில் மாற்றுவது இயலாததும், இன்றைய அளவில் தேவையற்ற பணியும் ஆகும். (தொழிலாளர் புரட்சிக்குத் தொழிற் கழகங்கள் அடிப்படை எனப் புறப்பட்ட ஒப்போலை உணர்வைப் பொதுவுடைமைக் கட்சிகள்—தொழிற் கழகங்களிலேயே உழன்று சுவை கண்டுவிட்டது போலவும், இட ஒதுக்கீடு வழியாகப் புரட்சி செய்ய வழிதேடிய குமுக சீர்திருத்த இயக்கங்கள், இட ஒதுக்கீட்டுச் சிந்தனையிலிருந்து இடத்தைப் பெயர்க்காமல் தேங்கி விட்டது போலவும் என்க.) நாம், மொழி வாழ்ந்தால்தான் இனம் வாழும், இனம் வாழ்ந்தால்தான் நாடு வாழும் எனும் பொது வகுபாட்டைக் கூறி, மொழி வளர்ச்சிக்கான அடித்தளங்களிலேயே ஈடுபடுவதுடன், இன்றைய தமிழக அரசு கையாண்டுவரும், மக்கள் புழக்கத்தில் புழங்கிவரும் தமிழ்ச் சொற்கள் யாவும் 'தென்மொழி' உருவாக்கியளித்தது எனும் பெருமையில் இருப்பது ஒரு வகையில் மொழியை வளர்த்தெடுத்தாலும்—இனத்தையும், நாட்டையும் எந்த அளவு அடிமைச் சேற்றில் கொண்டு செருகி வைத்திருக்கிறது—என்பதை அன்பு கூர்ந்து பார்க்கக் கேட்டுக் கொள்கிறேன்.

—அன்று தேசிய முதலாளிகளிடம் அடிமைப்பட்டுக் கிடந்த தமிழன், பின் இந்திய முதலாளிகளிடமும், அரசிடமும், வடநாட்டுச் சேட்டுகளிடமும், வெளிநாட்டு மூலப் பணங்களுக்கும் கூழைக்கும்பிடு போட்டு அடிமைப் பட்டிருப்பதை—எந்த மொழி, இன உணர்ச்சியைத் தூண்டி நிறுத்திவிடப் போகிறது, தென்மொழி?

—அதற்குள் அனைத்தும் பறிபோய் ஓட்டாண்டித் தமிழனும், வறண்ட தமிழ்ப் பாலை நிலமும்தான் எஞ்சும்.

—எனவே தாங்கள் மொழிவழி, மூடநம்பிக்கை வழியிலு மான மாற்றச் சிந்தனையிலிருந்து மீண்டுவிட்ட பிறகுதான் பிற அனைத்து விடுதலையும் எனக் குறிப்பிட்டிருப்பது வருத்தத்திற் குரியது. "இங்கே 'வர்க்கம்'—எங்கே இருக்கிறது? பல்வேறு மதங்களும், சாதிகளும்தாம் இருக்கின்றன. அவை நீங்கள் கூறும் வர்க்கத்தினின்று வேறுபட்ட-அழுத்தமாக மக்கள் மனத்தில் ஆழமாக வேரூன்றிய பிரிவுகள் ஆயிற்றே! காட்சியளவாகக்-கருத்தளவாக—உள்ள பிரிவுகளை இங்கே ஒழித்துக் கட்டாமல், வேறு எங்கோ உள்ள ஒரு நாட்டில் கற்பனைப் பிரிவாக உள்ள 'வர்க்க'ப் பிரிவை இங்கே ஒழிக்கப் புறப்பட்டுவிட்டு, இங்குள்ள இந்த மக்கள் பிரிவாகிய தமிழினத்திற்கு நலஞ் செய்ய முற்பட்-டிருப்பதாகக் கூறுகிறீர்களே!"

—எனத் தாங்கள் ஆசிரியவுரையில் எழுதியிருந்தீர்கள்.

'வர்க்கம்'—என்பது வகுப்பு, தொழில் செய்யக் கூடிய தொழிலாளி ஒரு வகுப்பினன். அவன் செய்த தொழிலால் உருவான பொருளை விற்பனை செய்து, அதன் ஊதியத்தைப் பெற்றுக் கொழுப்பவன் முதலாளி. அந்த 'முதலை'—ஆளுபவன் அந்த முதலாளி ஒரு வகுப்பினன். இந்த இரு போராட்டமும் உழைப்பும், ஊதியமும் பாகுபடுகிற அனைத்து இடங்களிலும் இருக்க, இ'து ஏதோ மந்திரம் அன்று. இ'து ஏதோ வெளிநாட்டு இறக்குமதிச் சிந்தனையன்று. நம் தமிழினத்திலும் இல்லாததன்று. —இவை யாவும் தாங்கள் அறியாததும் அன்று. இருப்பினும் தாங்கள் வர்க்க சிந்தனை இறக்குமதி என்பதுபோல் எழுதியிருப்பது வருத்தத்திற்கு உரியது.

தமிழக விடுதலைப் போராட்டத்தைச் செயலளவில் பொருளியல் சிக்கலைக் கையில் எடுக்காமல், வெறுமனே குமுக விழிப்புணர்வை மட்டுமே எடுத்ததினால்தான் பெரியாரிய செயல்பாடு வெற்றியளிக்கவில்லை. அதேபோல் குமுகத்தை முழுக்கப் புறந்தள்ளிவிட்டு, வெறுமனே பொருளியல் சிக்கலைக் கையில் எடுத்-ததினால்தான் பொதுவுடைமை இயக்கங்களும் இங்கு மண்ணைக் கவ்வின.

இதை நன்கு படிப்பினையாகக் கண்ட நாம் இன்றும் வெறுமனே குமுகச் சிக்கலை மட்டும் எடுத்துப் போராடுவது எந்த வகையில் பயன் நல்கும் என்பது விளங்கவில்லை.

—மார்க்சிய அறிஞர் குணா குறிப்பிட்டது போல்—

"தமிழகத்திலுள்ள வகுப்புப்(வர்க்கப்) போராட்டத்திற்குத் தமிழ்த் தேசியத் தன்மையை ஊட்டவேண்டும்"—என்பது, முழு உண்மையாகின்றது.

இரண்டாவதாக 'போராட்டப் பெருநடை'—தொடர்பாகக் கொடுக்கப்பெற்ற விளம்பரத்தில் கன்னியா குமரியிலிருந்து தில்லி வரை—என விளம்பரம் இருந்தது மீண்டும் மன வருத்தத்தையே கொடுத்தது.

தமிழக மக்கள் விடுதலையை நோக்கிச் செயல்படக் கூடிய நமக்கு, இத் தமிழக மக்கள் எந்த எந்த அடிமைத் தனங்களில் இருக்கிறார்களோ, அவற்றிலிருந்தெல்லாம் அவர்களை மீட்பது- தான் பணி, இந்தப் பணியை நாம் தமிழக மக்களிடம் தவிர வேறு எங்கும் செய்துவிட முடியாது. எனவே இந்த மக்களிடம் நாம் அவற்றை விளக்க வேண்டுவதும், அவர்களைப் போராட்டத் திற்கு அணியப் படுத்துவதும் நம் கடமையாகின்றது.

மாறாக, நம்மை அடிமைப் படுத்தியிருக்கும் எதிரியாக ஆளும் பிரிவாக நடுவண் அரசு ஒன்று மட்டுமில்லை—அந்த நடுவண் அரசோடு, உலக வல்லாளுமை நாடுகள், வட நாட்டு முதலாளி- கள், பார்ப்பன—வணிகர்கள், தேசிய முதலாளிகள் அனைவருந் தாம்! இவர்களையெல்லாம் எதிர்த்து நாம் எப்படிப் பெருநடை போக இயலும்? மேலும் பெருநடை போவதினால் நாம் போராளிகளாகக் காட்டப் படுகிறோம் என்பதைவிட, இந்தத் தமிழக மக்களைப் போராட்டத்திற்கு அணியப்படுத்துதலே தேவை.

மேலும், இந்திய நடுவண் அரசை எதிர்த்துப் பெருநடை யாக நாம் இங்கிருந்து வடநாடெல்லாம் போவதால், அங்குள்ள தேசிய இனங்கள் எழுச்சியுறவும் அது பயனளிக்கும் என்றால், பிற தேசிய இனங்களை எழுச்சிப் படுத்துவது நம் பணியன்று; நாம் அதைச் செய்யவும் இயலாது. —இறுதியாக, இது பெரும் விளம்பரமாக அமையும் என்றால், இதனால் மக்கள் கருத் தெழுச்சிப் பெறுவர் என்றால், அதற்கு இதுவும் நேரமன்று;

தமிழக அளவில் இனவிடுதலை நெருப்பு எரிந்து கொண்டிருக் கும் பொழுது வேண்டுமானால், சூழல் கருதி செய்யலாம்;

—எனவே, இங்கு நம் தமிழக மக்கள் விடுதலைக்காகப் போராடும் நாம் எதிரியிடமிருந்து நம்மைக் கணக்கிடாமல், நம்- மிடமிருந்து எதிரியைக் கணக்கிடுவோம்.

நம் தமிழகம் முழுமையும் பெருநடையை நடத்துவோம்! ஒவ்வொரு சிற்றூருக்கும் செல்வோம். இலக்கக் கணக்கான அறிக்கைகளைப் பரப்புவோம்! ஆயிரக்கணக்கான கலந்துரை யாடல்களில் பேசுவோம்! நம் தமிழக மக்களை நம் தமிழக மக்க- ளின் விடுதலைக்காக நாம் அணி திரட்டுவோம்.

அவர்களின் போராட்டத்தோடு நாமும் கலப்போம்! அந்த உழைக்கும் மக்களே விடுதலையின் தேவையை முழுக்க முழுக்க உணரமுடியும்! அவர்களே போரும் செய்ய இயலும்! அவர்களை நோக்கிப் பெருநடை நடப்போம்!

நம் தமிழகத்தின் விடிவுக்கு, நம் தமிழகத்தை எழுச்சிப் படுத்துவோம்!

வெல்க தமிழக மக்கள் விடுதலைப் போர்!

—விடுதலைவேட்பன், திருச்சி

2. தில்லிக்குப் பெருநடை தேவையா ?

பெருமதிப்பிற்குரிய ஐயா அவர்களுக்கு, கடந்த தென்மொழி இதழில் (சுவடி 23-ஓலை 4) கன்னியா குமரியிலிருந்து தில்லி வரை 100 நாள்கள் நடந்தே சென்று நடுவண் ஆட்சியினரிடம் கோரிக்கை கொடுக்க, "தமிழின உரிமை மீட்புக் கோரிக்கைப் போராட்டப் பெருநடை" என்று அறிவித்துள்ளீர்கள்.

எல்லாம் எண்ணித்தான் தாங்கள் ஒரு செயலில் ஈடுபடுவீர்-கள் என்பது நான் அறிந்ததே. இருப்பினும் இப் பெருநடை பற்றி ஒரு சில கருத்துகள் சொல்ல விழைகிறேன்.

தமிழ்நாட்டு விடுதலைக் கருத்து வெளியுலகிற்குத் தெரிய வேண்டும் என்பதற்காகவோ—தொண்டர்களைப் போராட்டக் களத்திற்கு அணியப்படுத்தப் பயன்படும் என்பதற்காகவோ—தாங்கள் இதை அறிவித்திருப்பீர்கள் என்று எண்ணுகிறேன்.

ஆனால் தில்லியரசின் வானொலி, தொலைக் காட்சி முதலியன வும், இதழுலகைத் தம் கைகளில் வைத்துக் கொண்டுள்ள பார்ப் பனச் செய்தித் தாள்களும் இப்பெருநடை பற்றி மூச்சுவிடப் போவதில்லை; தமிழர் நடத்தும் ஏடுகள் எங்காவது ஒரு மூலையில் நான்கு வரிகள் வெளியிடலாம்.

தமிழின எதிர்காலத் தீர்மானிப்புக் கருத்தரங்கும், அதை ஒட்டிய அன்பர்களின் மடல்களும் இப் பெருநடைக்குத் தில்லி வரை 100 நாள்கள் தொடர்ந்து நடந்துவர எவ்வளவு பேர் அணியமாய் இருப்பர், அறிவித்துவிட்டு வராமல் எத்தனைப்பேர் இருப்பர், இடையே நின்று விடுபவர் எத்தனைப்பேர் இருப்பர், என்பன பற்றி எல்லாம் சிந்திக்க வைக்கின்றன.

தமிழின உரிமை மீட்பு என்பது தமிழ்நாட்டு விடுதலைதான். தமிழக விடுதலையைத் தில்லியிடம் கேட்டுப் பெற்றுவிட முடியுமா? கேட்டுப் பெறுவதன்று விடுதலை—போராடி எடுத்துக் கொள்வது என்று தாங்களே எங்களுக்குச் சொல்லியிருக் கிறீர்கள்.

தமிழக முதலாளி வகுப்பினர் விடுதலைப் போரில் கலந்து கொள்ளப் போவதில்லை; அறிஞர்களும், நடுத்தட்டினரும் கொள்கை அறிவிப்பாளர்களாக — பரப்புகிறவர்களாக வழி காட்டிகளாக மட்டுமே இருப்பார்கள். களத்தில் நேரடியாக இறங்குபவர்கள் பெரும்பான்மையாய் உள்ள உழைக்கும் மக்களே.

அந்தப் பாட்டாளி மக்களை உரிமை மீட்புப் போராட்டத் திற்கு ஒன்று சேர்க்க அணிதிரட்ட, நமது கொள்கை செல்லாத ஊரே தமிழ்நாட்டில் இல்லை என்கிற நிலையை உருவாக்கிட இந்தப் பெருநடையைக் கன்னியா குமரியிலிருந்து சென்னை வரை ஓர் ஊர் விடாமல் நடத்தி, ஒவ்வோர் ஊருக்கும் பொதுக் கூட்டம் போட்டு (மேடை அமைப்பு, ஒலிபெருக்கி முதலியன

சிற்றூர்களுக்குத் தேவையில்லை) கொள்கை பரப்பினுல் நற்பயன் விளையும் என்றும் இதுதான் தேவையான விளம்பரம் என்றும் கருதுகிறேன். —தோயன் மாறன், சென்னை.

பி. கு. 'நடுவண் ஆட்சியினர்' என்று இந்தியப் புரட்டர்கள் கூறலாம். நாமே அப்படி அழைப்பதை ஏற்கவியலவில்லை. தில்லியரசு (அ) தில்லி என்று குறிப்பிடலாம். (தில்லி எருமை என்று ஒருவகை எருமையைக் குறிப்பிடுவர்.)

பேரா. அரங்கச் செல்வனுர் அருமை மகன் அறிவரசு மறைவுக்கு இரங்கலும் ஆறுதலும்!

நெடுநாளைய தென்மொழி அன்பரும், தூயதமிழ் வளர்ச்சிக்குத் தூணுக நின்று உதவுபவரும் கோபி, கலைக் கல்லூரியின் தண்டமிழ்ப் பேராசிரியரும் ஆகிய திரு. கா. அரங்கச்செல்வனுர் அவர்கள் தம் 3-ஆம் மகன் செல்வன் அறிவரசுடன், கடந்த 20-4-87 அன்று, காங்கேயம் அருகில் உள்ள கீரனூரில் உள்ள கோயிலொன்றின் தமிழ்க் கல்வெட்டை ஆய்வதற்கு மகிழுந்தில் செல்லும் பொழுது, இடையில் எதிர்பாராமல் நிகழ்ந்த நேர்ச்சியால் பேராசிரியர்க்கு விலாப்புறத்தில் வலிந்த அடிபட்டுச் சில நாள்கள் மருத்துவமனையில் இருந்ததும், அவரின் அருமைச் செல்வன் 7-ஆம் வகுப்பு பயிலும் 14 அகவையுடைய அறிவரசன் வலுத்த அடிபட்டதால் பேராசிரியர் நினைவுற்றுக் கிடந்த பொழுதே மறைவுண்டதும், அச் செல்வனின் மறைவைக் கேட்டு, இவர்களைக் கல்வெட்டு ஆய்வுக்காக அழைத்துச் சென்ற கீரனூர் கோயில் தக்கார் (பெயர் தெரியவில்லை) அவர்களும் மாரடைப்பால் இயற்கையெய்தியதும் ஆகிய துன்பத் தொடர் நிகழ்ச்சிகளைக் கேள்வியுற்றுச் சொல்லொண்ணுத் துயரமுற்றேன்.

தமிழ்த் தொண்டு செய்யச் செலவு மேற்கொண்ட பொழுது எம் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய அருந்தமிழ்ப் பேராசிரியர் உயர்திரு கா. அரங்கச் செல்வனுர் அவர்களுக்கு நேர்வுற்ற இப் பேரிடர்க்கும் பேரிழப்புக்கும் என் ஆழ்ந்த அழுங்கலையும் இரங்கலையும் அவர்க்கும், அவர் அன்புச் செல்வியாரும் மறைந்த செல்வன் அறிவரசனின் அருமைத் தாயாரும் ஆகிய திருவாட்டி சரசுவதி அரங்கச் செல்வனுர் அவர்களுக்கும் தெரிவித்துக் கொள்வதுடன் இப் பேரியற்கைப் பெருமறைவிற்குத் தென்மொழியின் சார்பிலும் நம் குடும்பச் சார்பிலும் ஆற்றி அமைந்திருக்க வேண்டுமென ஆறுதலும் கூறிக் கொள்கிறேன். அன்பன்,
—பெருஞ்சித்திரன்.

'தமிழ் இலக்கியத்தில் தமிழின வீழ்ச்சியும் தாழ்ச்சியும்!

புலவர். பொதிகைச் செல்வனுர், பவானி

அவர்கள் எழுதும் கட்டுரைத் தொடர் விரைவில் 'தென்மொழி'யில் தொடரும்

கொதித்தெழுவீர் !

பாவலர். கடவூர். மணிமாறன்.

குடியாட்சி குரல்வளையை நெறிக்கின்ருர் !
கொலைகொள்ளை இவற்றில் தேர்ந்து
நடிக்கின்ருர் மக்கள் நலப் பொதுத்தொண்டில்
நாட்டமிக உடையார் போல !
படித்தவரும் வாய்மூடிக் கிடக்கின்ருர் !
பாய்புலிகள் ஆத்தோல் போர்த்தின்
விடிவுண்டோ ? இந்நாட்டின் விடுதலையால்
விளைந்தபயன் எதுவோ சொல்வீர் !

நேர்மையெலாம் நெஞ்சொடுங்கி மூலையிலே
நெக்குருகி உயிரை மாய்க்கப்
பார்த்திருந்த வந்தவரோ பதவிநலன்
பொருட்குவிப்பில் உள்ளம் போக்கி
வேர்களுக்கே அன்ருடம் ஊற்றுகிருர்
வெந்நீரை ! இளைஞரெல்லாம்
சீர்கெட்டு மதிமயக்கும் கவர்ச்சிகளில்
சிக்குண்டு தவிக்கின் ருரே !

ஒன்றுக்கும் உதவாரை ஒருமுகமாய்
உயரத்தில் ஏற்றி விட்டே
கன்றிழந்த 'ஆ'வெனவே கதறவிட்டார்
மக்கள்தமை ! வேளை தோறும்
தின்பதுவே வாழ்வென்று திரிந்தவர்கள்
திருந்துதற்கு முயலக் காணேம் !
என்றென்றும் அடிவருடி இழிதொழிலில்
இன்பமிகக் கண்டார் போலும் !

தொட்டிலையும் ஆட்டுகிருர் ! பிள்ளையையும்
கிள்ளிவிட்டு மகிழு கின்ருர் !
சட்டங்கள் துணையாலே தமைக்காத்துச்
சழக்குகளைப் பெருக விட்டார் !
முட்செடிகள் எல்லாமே முழுமரமாய்
வளர்ந்ததுபோல் அனைத்துத் தீங்கும்
வட்டமிட, வறுமையிங்கே பல்கிவிட
வருதுயர்கள் தொலைவ தென்ருே ?

முறைதவறிப் பழிவாங்க முனைகின்ற
முண்டங்கள் மூளை யின்றிச்
சிறைப்படுத்தி ஒறுப்பதற்கும் துணிந்துவிட்டார்
செயலிழந்தும் செருக்குக் கொண்டார்
கறைச்சேற்றில் கயமைகளில் நெளிகின்ருர் !
கடுகளவும் தொண்டு செய்யாக்
குறைகுடங்கள் கூத்துகளைத் தடுத்திடவே
கொதித்தெழுவீர் ! கொடுமை சாய்ப்பீர் !

கொய்யாக்கனி

நாடக ஆக்கம் : அதியமான்

(பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் பாவியம்.)

காட்சி கக. (தொடர்ச்சி)

மரு: வள்ளி! நிலத்தை உழுது பயன்காணாதவன் நிலத்தைப் பழுதென உளறியதுபோல இருக்கிறது உன் புலம்பல்; எழுதும் கோல்களெல்லாம் ஈட்டிமுனையானால் இந்த நாட்டைக் காட்டிக் கொடுக்கும் கயவர்கள் அடங்கி விடுவார்கள்; கவலையை விடு; சிங்கன் நமக்காகக் காத்துக் கொண்டிருப்பார்.

வள்: மருக்கொழுந்து! என்இன்றமிழ் அன்பன் சிங்கன் எங்குளார்? விரைவாய்ச் சொல்; சென்று காணுவேன்;

மரு: அப்படிக்கேள். நடக்க வேண்டியதை எண்ணிப்பார்; நடந்ததை எண்ணி ஏன் ஏங்குகிறாய்? சிங்கனை என் வீடொன்றில் இருக்க வைத்திருக்கிறேன்; நம் வரவை எதிர் நோக்கி இருப்பார்; விரைவில் புறப்படு;

வள்: தாத்தா வெளியில் போயிருக்கிறார்; வந்ததும் என்னை அவர் தேடி அலைவாரே;

மரு: அவர் வீடு திரும்பும் முன்னால் வந்து விடலாம்; வரும் போது சிங்கனையும் உடன் அழைத்துக் கொண்டு வரலாம்;

வள்: அதுவும் சரிதான்; நான் புறப்பட்டு விட்டேன்; வா; வெளியில் நான் ஓலைக் கதவைப் பூட்டுகிறேன்; (ஓலைக் கதவைப் பூட்டிவிட்டு இருவரும் சாலைவழி நடந்து போகிறார்கள்.)

காட்சி—உ௨

உறுப்பினர்கள் : 1. கிழவர்,
2. சிங்கன்;

இடம் : கிழவர் வீடும், தோட்டமும்;

சிங்: (மருக்கொழுந்தும், வள்ளியும் போனபின் சிங்கன் கிழவர் வீட்டிற்கு வருகிறான்; வள்ளியின் வீட்டின் ஓலைக் கதவைத் தட்டிப் பின் எட்டிப் பார்க்கிறான்; வீட்டில் எவரும் இல்லாததால் தனிமையில் பேசுகிறான்.)

குடில் அமைதியாக இருக்கிறது; ஒருவரும் இல்லையே? (எட்டிப் பார்த்து) தாத்தா தாத்தா என்பாள்; தாத்தாவையுங் காணோம்; (அங்குமிங்கும் நடந்துகொண்டு அண்ணாந்து பார்த்து) வள்ளியின் குடில் இதுவன்றோ?

(தோட்டத்திற்குள் வந்து) பூஞ்செடிகள் இருப்பதைப் பார்த்தால் வள்ளியின் இருப்பிடந்தான். (மல்லிகைமலர் மணம் நுகர்ந்து) அருமையான மணம். (மரநிழலில் சென்று தங்கி) நல்ல குளிர் நிழல். தமிழ் நூலொன்றை எடுத்து வந்திருக்கலாமே. இந் நிழலிருந்து படிக்கலாம்; என்றாலும் தமிழ்நூல் பயின்ற திறம் போல் உள்ளது, இந்த நிழல். தென்மொழி! தமிழ் பேசும் இந்த நிலத்தில் வீசும் தென்றலும் உடல்நலந் தருகிறது. (விரலை அசைத்து, தென்றல்—வாடை. தென்றலில் உள்ள குளிர்மை வாடையில் இல்லை. வடக்கிருந்து வருவதெல்லாம் நச்சுத் தன்மையுடையதுதான். வாழ்க தமிழ்! வாழிய தென்றல்! ங்; எப்படியும் வள்ளி இங்குதானே வருவாள். வரட்டும். (உறங்கி விடுகிறான்)

கிழ: (சிங்கன் உறங்கும் இடம் வருகிறார். சிங்கனின் முகத்தை உற்றுக் கவனித்து) யாரிவன்? இங்கு ஏனிவன் வந்தானோ? சொந்த இடத்தில் உறங்குவது போல உறங்குகிறான். (தட்டி) தம்பி! ஏய்! எழுந்திரு.

சிங்: (பதறியடித்தெழுந்து) வள்ளி.

கிழ: என்ன தம்பி? வள்ளியென்றெழுகிறாயே; வள்ளி யார்?

சிங்: வள்ளி யாரா? இந்த வீட்டிலிருப்பவள். பூ விற்பவள்.

கிழ: அது தெரிகிறது. நீ இங்கு ஏன் வந்தாய்?

சிங்: அதுவா; தாத்தா! என் வீட்டின் பக்கத்து வீட்டிற்கு இந்தக் குடிலில் வாழும் பெண் வள்ளி, நாள் தவறாமல் மலர் கொண்டு வந்து கொடுப்பாள். இப்போது பல கிழமைகள் வள்ளி அந்தப் பக்கம் வரவில்லை. அந்த வீட்டில் ஒரு சிறுமி மலர் வேண்டுமென்று பிடியாய்ப் பிடித்துத் துடியாய்த் துடிக்கிறாள். அதற்காக, அவர்களின் வேண்டுதலுக்காக வள்ளியைப் பார்க்க இங்கு நான் வந்தேன். அந்த எண்ணத்தில் உறங்கியதால் வள்ளியென்று கத்தி விட்டேன்.

கிழ: ஏன் தம்பி, வேறு இடத்தில் பூவை வாங்கிக் கொள்ள வேண்டியதுதானே.

சிங்: அந்தக் குழந்தைக்கு வள்ளிதரும் பூதான் வேண்டுமாம்.

கிழ: அ'தென்ன அப்படி?

சிங்: உள்ளம் ஒரு பொருளைப் பற்றிவிட்டால் அதை மாற்ற இயலாததன்றோ? தாத்தா! பெரியவனானதுந்தான் அவனுள்ளம் குரங்கு மாதிரி கிளைவிட்டுக் கிளை தாவும். குழந்தை உள்ளம் பாருங்கள். தூய்மையான உள்ளம்; அதில் எழும் எண்ணங்களும் உறுதியானவை. சிலர் பெரியவரானாலும், அப்படிப்பட்ட உள்ளம் உண்டு.

கிழ: தம்பி; நீ யாரென்று இப்போதுதான் புரிகிறது. நீ தந்த விளக்கங்கள், குழந்தைக்கு அன்று; உனக்கே சரி; சரி, வள்ளியோடு நீ தான் பழகுகிறாய் என நினைக்கிறேன்.

சிங்: தாத்தா என்னை முன்னாலே பார்த்திருக்கிறீர்களோ?

கிழ: நினைவில்லை. ஆனால், வள்ளியைக் கவர்ந்த கள்ளன் நீ என்பதைப் புரிந்து கொண்டேன்.

சிங்: தாத்தா பிறர் பொருள் வெளவுதல் தவறு. ஒருவரோடொருவர் உள்ளங் கவருதல் தவறென்று கூறுவது அறிவற்றோர் கூற்று. அழகோடு அழகும், அறிவோடு அறிவும் கூடினால் இன்பந் தானே தாத்தா.

கிழ: (நகைத்து) ஆமாம்; ஆமாம், உண்மைதான். நல்லதைச் சொன்னாய். ஏன் தம்பி உன் ஊர் எதுவோ?

சிங்: என் ஊர் வரிப்புறம்.

கிழ: என்ன!? வரிப்புறமா! எந்த ஊரைச் சொல்லுகிறாய்?

சிங்: முன்னால் பஞ்சம் வந்து, துன்பந்தந்த வரிப்புறத்தைத் தான் சொல்லுகிறேன்.

கிழ: தம்பி வரிப்புறம் என்னும் சொல்லைக் கேட்டு வெகு நாள்களாகி விட்டன. நீ சொல்லக் கேட்டதும் எனக்கோர் ஏக்கம் வருகிறது.

சிங்: எனக்குந்தான். சில வேளைகளில் அவ்வூரை நினைத்து நானும் ஏங்குவேன். பிறந்த மண் அன்றோ?

கிழ: தம்பி எனக்கும் ஊர் அந்த வரிப்புறந்தான்!

சிங்: அப்படி என்றால், உங்களுக்கு, எனக்கு, வள்ளிக்கும் ஒரே ஊர் தான்.

கிழ: அப்படித்தான் வந்து சேருகிறது. ஏன் தம்பி அந்த ஊரை விட்டு ஏன் வந்தாய்?

சிங்: அது பெரும் வரலாறு தாத்தா.

கிழ: எனக்கும், அந்த ஊர் வரலாறு தெரியும். என்றாலும் உன் வரலாற்றையும் சொல் கேட்கலாம்.

சிங்: தாத்தா எனக்குப் பதினாறு அகவை இருக்கும்...இம்; வந்த வேலையை விட்டு விட்டுக், கடந்ததைப் பேசிக் கொண்டிருக்கிறோம்.

கிழ: என்ன வேலை?

சிங்: ஏன் தாத்தா நினைவில்லையா? வள்ளி எங்கே?

கிழ: ஓகோ. ஆமாம். ஆமாம். அவள் மலர் விற்கப் போயிருப்பாள் என்று நினைக்கிறேன். நான்வரும்போது அவள் வீட்டிலில்லை. உன்னைத்தான் கண்டேன். எத்தனையோ தடவை அவளிடம் பூ விற்பனைக்குச் செல்ல வேண்டாம் என்றேன். கேட்பதே கிடையாது. இங்கு ஒரு விலங்கு கட்டுக்கு அடங்காமல் அலைகிறது. அதனால் அச்சம் ஏற்படுகிறது.

சிங்: விலங்கா?!

கிழ: ஆமாம், விலங்கேதான் அது. கருப்பனன் என்னும் மாந்த உருவில் அலையும் வெறி விலங்கு.

சிங்: உறுதியானவரை எதுவும் என்னவும் செய்ய இயலாது தாத்தா; கருப்பனன் கொடுமைக்கு முடிவு வரும்.

கிழ: அவன் தொலைவதற்குள் எத்தனைப் பேர்களையோ தொலைத்து விடுவானே.

சிங்: அஃது உண்மைதான். கொடுமை வளர்ந்து அடியோடு அழிந்த வரலாற்றைத்தான் கேட்டிருக்கிறோமே.

கிழ: தம்பி! உன் வரலாற்றைச் சொல்.

சிங்: ஆமாம். சொல்கிறேன் தாத்தா. வரிப்புறத்தில் கொடுமையான பஞ்சம். மழையுமில்லை. வயல்களில் பயிருமில்லை. மக்களுக்கு வேலையுமில்லை. வயிற்றுக்குச் சோறில்லை. மரக்கிளையிலுள்ள இலைகளைத் தின்னலாம் என்றால், பச்சையே இல்லாத பாழ்மரத்தில் தழை ஏது இலை இருக்க. இந்த நிலையைப் பற்றி ஆய்ந்து பார்க்க ஊரில் கூட்டம் கூட்டி இந்தப் பஞ்சத்திலிருந்து தப்ப வழி என்னவென்று உன்னிப் பார்க்க ஊர்ப் பெரியவர்கள் ஒரு நாள் இரவு கூடினர்.

காட்சி—21

உறுப்பினர்கள் : 1. ஊர்த்தலைவர். 2. பெரியவர்-1.
3. பெரியவர்-2. 4. பெரியவர்-3.
5. பொது மக்கள்.

இடம் : ஊரின் பொது இடம்.

நிலை : பஞ்சத்தைப் போக்க வழிகாணல்.

ஊ. த: (எழுந்து) அருமைமிகு பொது மக்களே, பெரியோர்களே அனைவரையும் வணங்குகிறேன். நம்மூர் என்றும் காணுப் பெரும் வறட்சியைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது. நீங்களும் அறிந்ததே. ஆடுகளும், மாடுகளும் குடிக்கத் தண்ணீரின்றி வாடி விட்டன. காடு சென்ற ஆடுகள் கள்ளியின் சிறு நிழலில் தங்கி மேய்வதற்குப் புல் இல்லாமல் பால் வற்றி விட்டன. குட்டிகள் தண்ணீருக்காகக் காடெல்லாம் அலைந்து நிலவெடிப்புக்குள் கால்களை விட்டு எடுக்க முடியாமல் கத்துவது துயர்தரும் காட்சி. காடுகளெல்லாம் சுடுகாடாய் விட்டன.

பெ-1: ஊரின் நிலையைப் பற்றிப் பேசி என்னபயன்? அதனை நீக்க வழி உண்டா? அதுதான் ஆராயப்பட வேண்டிய பணியாகும்.

ஊ. த: ஊரில் உள்ள நிலை எப்படி உள்ளது என்று தெரிந்தால் தான் அதனை நீக்க என்ன வழி எனக் கண்டு பிடிக்க முடியும்.

பெ-2: உண்மை. வெம்மை தாங்காது துயருறும் மக்கள் பட்டினி கிடந்து மடிகின்றனர். பிழைத்துக் கொள்ளலாம் என்ற எண்ணத்தில் மக்கள் நாகதாளிப் பழத்தைத் தின்று விட்டு நாவின் வறட்சி தாங்க முடியாமல் சாகின்றனர். தப்பித்தவறி தளிர்த்த புளிஇலையையும், குப்பைக் கீரையை யும் வதக்கி உண்டு நாட்களை எண்ணி எண்ணி ஓட்டினர்; பலர் ஊரை விட்டே ஓடிவிட்டனர். வரிப்புறம் என்றால் வரிப்புலி வாழும் ஊர் எனக் கூறும்படி செல்வர்கள், ஏழை களின் சொத்துகளைப் பிடுங்கிக் கொண்டு பலரை ஓட்டாண்டியாக்கினர்.

பெ-1: இதுதான் நமக்குத் தெரியுமே; வளமான ஊர்தான் மழை இல்லை; மண் மங்கிவிட்டது; இனி இப் பஞ்சத்தை ஓட்டுவது எப்படி?

பெ-3: ஆமாம் அதற்கு வழி என்ன? முதலில் உழவுத் தொழிலைச் செய்திட ஏதாவது வழி இருக்கிறதா? தண்ணீருக்கு வழி என்ன? என்று ஆய்ந்து பார்க்க வேண்டும்;

பெ-1: நான் ஒரு வழியைச் சொல்லுகிறேன்; மழைக் கடவுளை (வர்ண பகவான்) வேண்டுவோம்; அவனுக்கு விழா நடத்தி ஞல், மழை கட்டாயம் பெய்யும்;

பெ-3: இந்த ஊர் மழை இல்லாமல் வறுமைப் படுவது தெரியாமலா இருப்பான், விழா நடத்தி மழை பெய்யும்-படி அவனிடம் கேட்க;

பெ-1: சாத்திரப்படி, மழைக் கடவுளுக்குச் செய்யவேண்டி-யதைச் செய்யாவிட்டால் மழையும் பெய்யாது; மண்ணும் விளையாது.

பெ-3: இந்த ஊருக்கு மழை பெய்ய வைக்க மழைக் கடவுளா லும் முடியாது; எந்தச் சிலைக் கடவுளாலும் இயலாது;

பெ-1: இப்படி கடவுள் மறுப்பு (நாத்திகம்) பேசியதாலேயே இந்த ஊர் இவ்வகை வறுமைக்குள் ஆனது;

பெ-3: கடவுள் மறுப்பு பேசாதார் கூட்டந்தான் மிகுதியாக உண்டு இந்த ஊரில்; அவர்களுக்காவது மழை பெய்யலாம் அல்லவா?

பெ-1: நீங்கள் பேசுவதுதான் கடவுளுக்கு எட்டுகிறது; எங்கள் குரல் கேட்பது மாதிரி தெரியவில்லையே;

பெ-3: கடவுள் என்று கூறி அதன் பெயரால் மக்கள் பொருளை ஏமாற்றிப் பிடுங்கும் எத்தர்களின் பேச்சு எப்படி எட்டும்? நான்கு ஐந்து திங்கட்கு முந்திதான் வடக்கத்தியம்மனுக்கு வயிறு காய்கிறது என்று குடம் குடமாகப் பாலை வாங்கி

ஊற்றிக் கழுசடையில் ஓடவைத்தனர். பயன் என்ன விளைந்தது? பாலில்லாமல் ஏங்கும் பிள்ளைகளுக்குப் பாலுமில்லை; குடிக்கத் தண்ணீரும் கிடையாது. இன்னுமா அவற்றிற்கு விழா வேண்டும். பகுத்து உணர வேண்டாமா? அல்லது பாழாய்ப் போவோம். மாந்தர் பேசுவது வானொலிப் பெட்டிக்குக் கேட்கிறது. வான்உறையும் கடவுளுக்கு ஏன் எட்டவில்லை. ஏதாவது கற்பனை செய்து கொண்டிருப்பது இந்த நாட்டில் வழக்கமாகி விட்டது. சரி விடுங்கள்.

பெ-1: அப்படியானால் மழையைப் பெய்ய வைக்க என்னதான் செய்வது?

பெ-3: ஒன்றுஞ் செய்ய முடியாது. அதுவும் நம் நாட்டில் அறிவியல் வளர இடமே கிடையாது. கங்கை காவேரித் திட்டம் வந்ததும் தண்ணீர் செழிக்கும்.

பெ-2: கங்கையும் காவேரியும் பக்கத்திலா இருக்கின்றன. இவர் என்னவோ வரிப்புறத்திற்கு எட்டும் தொலைவில் இருப்பது போலப் பேசுகிறார். கங்கை இருப்பதோ சிவனுடைய தலையில். காவேரி கன்னடத்தான் நாட்டில் நமக்கெங்கே தண்ணீர்? இரண்டும் எட்டாக்கை. (தொடரும்)

இந்தியத் தேசியமும் திராவிடத் தேசியமும்

0 இந்தியத் தேசியமும் மாயை! திராவிடத் தேசியமும் மாயை! தமிழ்த் தேசியந்தான் மெய்யானது! எனவே தமிழக இளைஞர்கள் இந்திய, திராவிட மாயைகளிலிருந்து விடுபட்டுத் தமிழ்த் தேசிய இன விடுதலைக்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என்பதை ஆயிரக்கணக்கான வரலாற்றுச் சான்றுகளுடன் தம் நுண்மாண் நுழைபுலத்தால் விளக்குகிறார் இதன் ஆசிரியர்-

பேரறிஞர் குணா.

420 பக்கங்கள். விலை: உருபா 25. *சலுகைவிலை உரு. 20*

தாமரை கலை இலக்கிய மன்றம்

16, சபாபதி தெரு, (காமராசர் சாலை குறுக்கு) பெங்களூர்-1

"தென்மொழி"

சென்னை-5.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

ஆண்டுக் கட்டணம்	:	உருபா 20.00
அரையாண்டுக் கட்டணம்	:	,, 10.00
தனியிதழ்	:	,, 1.75

ஓரிதழுக்கு உருபா 3.50 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க !

எண்ணுவீர் தோழர்களே!

--பாவலர் வள்ளிகேள்வன்

நாடுவேறு பட்டபோதும்
ஆரியர்க்குள் ஒற்றுமை
கூடும்உண்மை கண்டபின்னும்
கோடுபட்டு நிற்பதோ ?
வாடுகின்ற ஈழமக்கள்
வாழவேண்டும் என்றுநீர்
பாடுபட்ட போதும்என்ன !
பார்வைமாறு பட்டதே.

காவிலங்கி வீடிலங்கிக்
காட்சிதந்த ஈழமே
பூவெரிந்து தீய்தல்போன்று
பொற்பிழந்து போனதே !
சாவைவென்று நாடுமீட்கத்
தாம்முனைந்த வேளையில்
நாவெரிந்த உட்புகைச்சல்
நன்மையன்று தோழரே !

அன்றுவேந்தர் கொண்டவீரம்
இன்றுகாட்டும் தோழரே !
ஒன்றிணைந்து போர்முகத்தில்
ஓங்கவேண்டும் நீவீரே !
குன்றுமுட்டும் கூகையாகிச்
சிங்களத்தர் மக்களை
கொன்றுவீசும் புன்மைக்கண்டும்
மாறுபட்டு நிற்பதா ?

முல்லைபோலும் தங்கைமார்கள்
மூச்சடங்கி வீழ்ந்தனர் ;
மெல்லவீசு தென்றல்போன்ற
சேய்கள்கூட மாண்டனர் ;
அல்லல்ஊ டறுக்கும்வேளை
உள்ளரிக்கும் உட்பகை
கொல்லவந்த நஞ்சு ! கொஞ்சம்
மஞ்சமன்று தோழரே !

தாயினத்தில் வீடணர்கள்
தாம்செழிக்கும் வேளைகாண்
பேயினத்துச் சிங்களர்க்குத்
தில்லிஎன்றும் நட்புதான் !
ஆய்தலற்ற உட்பகைக்குள்
ஆர்பிழைப்பர் கூறுமின் ?
பாய்வதென்றும் போர்க்களத்தில்
பகைவர்மீது தோழரே !

தகுதி, திறமை - என்பவற்றைத் தேர்வின் மூலம் மதிப்பிட முடியுமா ?

-- பேராசிரியர்.ஆர்தர் பெத்ரோவ்சுகி.

குழந்தைகள் அனைவரையும் மொத்தமாக அறிவுத் திறன் ஆய்வுக்குட்படுத்துவது, அ்து எந்த நோக்கத்திற்காக இருப்பினும்—சோவியத்து ஒன்றியத்தில் விரும்பத்தக்கதாகக் கருதப் படுவதில்லை. மேலே நாடுகளில், பல உளவியல் ஆய்வுகளும், அறிவுத் துறை ஆய்வுகளும், தேர்வுகளும் நடத்தப் படுகின்றன. எனினும் ஒரு குழந்தையின் திறனையோ, அல்லது அதன் அள்விறந்த திறனையோ ஆய்ந்தறிவதற்கு அத்தகைய ஆய்வுகள் முழுக்க, முழுக்கப் பலனளிப்பதில்லை—என்று பல அயல் நாட்டு உளவியலாளர்கள் கருதுவதைப் போன்று, சோவியத்து அறிஞர்களும் கருதுகின்றனர்.

அமெரிக்க நாட்டைச் சேர்ந்த இராபர்ட் எல். ஏபிள் கூறுவதைப் போன்று, இத்தகைய ஆய்வுகள் மாந்தனின் உளநிலையை இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் தாக்கி விடுகிறது. இளஅகவையிலேயே, அறிவுத் திறன் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுத் தோல்வி கண்ட ஒரு குழந்தை, பின்னர் தன் வாழ்நாள் முழுவதுமே ஒருவகைத் தன்னம்பிக்கையை இழந்த நிலையில் தொல்லைப் படுகிறான். மாந்த உரிமையை உயிர் உரிமையை அத்தகைய ஆய்வுகள் பறித்து விடுகின்றன என்பது அவரது கணிப்பு.

முதலாளிய நாடுகளில் உள்ள நடைமுறை வழக்கம் போல், சோவியத்து நாட்டில் குழந்தைகள் அவர்களது திறமைக்கேற்றவாறு தரம் பிரிக்கப்படுவதில்லை. அறிவுத் திறன் ஆய்வுகளினடிப்படையில் முதல் தரம் என்றும், கடைத்தரம் என்றும் பிரிக்கப்பட்டு, முதல் தரத்தைச் சேர்ந்த குழந்தைகளே கல்வி பெறத் தகுதியானவர் என்று கருதும் நிலை சோவியத்து நாட்டில் அறவே கிடையாது.

அறிவுத் திறன் ஆய்வுகள் எதை அளவிடுகின்றன? 'மனத் திறன்' என்று நம்மிடம் கூறப்படுகிறது. ஆனால் அ்து இன்னமும் மெய்ப்பிக்கப்படவில்லை. அத்தகைய ஆய்வுகள், ஒரு குழந்தைக்குப் பிறவியிலிருந்தேயுள்ள சிறப்பான அறிவைக் கண்டுபிடிக்கப் பயன்படுவதில்லை; மாறாக, அக் குழந்தை அதுவரை பெற்றுள்ள சில திறனையும், அது கேள்வியுற்றிருக்கும் சில விளத்தங்களையுமே அளவிடப் பயன் படுகிறது. எடுத்துக் காட்டாகப் பெற்றோர்களாலும், ஆசிரியர்களாலும் நன்கு பயிற்றுவிக்கப் பட்ட குழந்தைகள், அத்தகைய ஆய்வுகளில் நன்கு தேர்ச்சியுறுவதைக் காணலாம்.

தீர்க்கப்படாச் சிக்கல் : 'ஒரு வகுப்பிற்கு 10 அல்லது 15 குழந்தைகளையுள்ள ஒரு தனியார் தொடக்கப் பள்ளியில் பயின்று வெளிவரும் குழந்தையின் திறனும், வகுப்பிற்கு 45,50 குழந்தை-

களைக் கொண்ட பொதுப் பள்ளியில் பயின்று வெளிவரும் குழந்தையின் திறனும் உறுதியாக வேறுபடுகின்றது; இந்த வேறுபாட்டைத்தான் முதலாளியக் குடும்பங்களிலுள்ள குழந்தைகளின் திறனுக்கும், தொழிலாளர் குடும்பங்களின் குழந்தைகளின் திறனுக்கும் உள்ள வேறுபாடு என்று நாம் கூறுகிறோம்; ஆனால் இது கல்வி வசதி, வாய்ப்புகளில் உள்ள வேறுபாடு என்பதைப் பலரும் கவனிக்கத் 'தவறிவிடுகின்றனர்' என்கிறார் பிரிட்டிசு உளவியலாளரான பிரைன் சைமன் என்பார்;

ஆய்வுக்குள்ளாக்கப்படும் ஒருவர் எத்துணையளவு கல்வி பெற்றுள்ளார் என்பதை வேண்டுமானால், மேற்சொன்ன ஆய்வுகள் தெரிவிக்குமேயல்லாது, மேலும் எந்த அளவுக்கு அறிவு பெற அவரால் முடியும் என்பதை அவை தெரிவிக்காது; இதுபோன்ற பொதுவான அறிவுத் திறன் ஆய்வுகளின் மூலம், ஒருவரின் உள்ளே மறைந்துள்ள 'மிகச்சிறந்த ஆற்றலை'க் கண்டுபிடித்துவிட முடியாது.

அறிவியல் முறையிலான சில ஆய்வுகளைக் கொண்டு, ஒரு குழந்தையின் மன வளர்ச்சியையும், திறனையும் கண்டறிவதை சோவியத்து உளவியலாளர்கள் ஒப்புக் கொள்ளுகின்றனர்; ஆனால், அவ் வாய்வுகள் அக் குழந்தையின் வருங்காலத் திறனை எடுத்தோதும் பதிவேடுகள் என்று ஏற்றுக் கொள்ள அவர்கள் அணியமாக இல்லை.

'ஒரு குழந்தையிடம் ஏதேனும் ஒரு சிறிய கணக்கோ, அல்லது கேள்வியோ கேட்கப்படுகிறது; அதற்கு அக் குழந்தையால் விடை காண முடியவில்லையெனில்' அ'து அக் குழந்தையின் திறனை எவ்வகையிலும் எடுத்துக் காட்டவில்லை, என்று புகழ் பெற்ற சோவியத்து உளவியலாளரான லெவ் விகோத்சுகி கூறுகிறார்.

தனியாகச் சிந்தித்து, அந்தக் கணக்கிற்கு விடை காணும் அளவுக்கு அக் குழந்தை போதிய அறிவு பெறவில்லை என்பதையே அந் நிகழ்ச்சி எடுத்து உரைக்கிறது. ஒரு குழந்தையின் மன வளர்ச்சி என்பதே கல்வியின் போக்கில் ஏற்படுவதுதானே! அஃதாவது முதியவர்களுடன் அக் குழந்தைக்குள்ள தொடர்பினால் ஏற்படுவது; தனியே, தனியாகச் செய்து முடிக்க முடியாத ஒன்றை, அக் குழந்தை பிறரது உதவியுடன் செய்து முடிக்கவும் கூடும்; அதன் பொருள் என்ன? தனியாகச் செய்வதற்கு அக்குழந்தையால் இன்று முடியவில்லை என்றால், நாளை அது கற்றுக் கொள்ள முடியும் என்பதுதானே!

ஆகவே குழந்தைகளின் திறனை ஆய்வு செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டால், அத்தகைய ஆய்வுகள் இருமுறை செய்யப்பட வேண்டும் என்பது வி. கோத்சுகியின் கருத்து. முதல் முறை அக் குழந்தை தனியாகவும், இரண்டாவது முறை பிறரது உதவியுடனும் அது கேள்விகளுக்கு விடையளிக்க வேண்டும்; அது-

செய்திகள்

1. தமிழ்ப் பேரவைச் சிறப்புக் கூட்டம் - அரசினர் கலைக் கல்லூரி-அரியலூர்.

கடந்த 20-2-87 காலை 11 மணியளவில் அரியலூர், அரசினர் கலைக் கல்லூரியில், தமிழ்ப் பேரவைச் சிறப்புக் கூட்டம் நடை பெற்றது. நிகழ்ச்சிக்குக் கல்லூரிப் பொறுப்பு முதல்வர் பேராசிரியர் திரு. கோ. செயராமன் க. மு. தலைமை தாங்கினார். தமிழிலக்கியம் மூன்றுமாண்டு மாணவர் திரு. சு. முருகையன் வரவேற்புரையாற்றினார். தமிழ்ப் பேராசிரியர் பர். சாமி. அறவாணன் (பிச்சைப்பிள்ளை) அவர்களின் அறிமுகவுரைக்குப் பின் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் 'இலக்கியம் வாழ்க்கைக்குப் பயன்படுமா?' என்னும் தலைப்பில் ஏறத்தாழ 2-30 மணிநேரம் சிறப்புரை ஆற்றினார்கள். இறுதியில் திரு. இரா. கலிய-பெருமாள் நன்றியுரையுடனும் இனிய பகல் விருந்துடனும் விழா சிறப்புற நிறைவுற்றது.

2. ந. வை. இளஞ்செழியன் - தமிழரசி 'வாழ்க'

நிகழும் தி. பி. 2018 மீனம் 13 (27-3-87) ஆம் நாள் வெள்ளிக் கிழமை காலை 6 மணியளவில், தஞ்சை மா. வ. கருக்காடிப்பட்டி திருவாளர்கள் நல்லம்மை-வைத்தியலிங்கம் இணையரின் திருமக னும், நீண்ட நாளைய தென்மொழி அன்பரும், தமிழக விடுதலைக்காகச் சிறை சென்ற மறவரும் ஆகிய திரு. ந. வை. இளஞ்செழியன் அவர்களுக்கும், பாச்சூர் திருவாளர்கள் சாவித்திரி-முத்துச்சாமி இணையரின் திருமகள் செல்வி இராசேசுவரி என்றழைக்கப் பெற்ற தமிழரசிக்கும், பாவலரேறு பெருஞ்-சித்திரனார் அவர்கள் தலைமையில் தமிழ்த்திருமணம் இனிதே சிறப்புற நடைபெற்றது. தொடக்கத்தில் திரு. த. தமிழ்த் தென்றல் க. இ. வரவேற்புரை நிகழ்த்தினார். தலைவர் திருமண நிகழ்வை நடத்திய பின்னர், மணமக்களை வாழ்த்தி, திருவாளர்-கள் துரை.பாலகிருட்டிணன், கதிர் தமிழ்வாணன், மா. வே.துரை மாணிக்கம், இரத்தினகிரி, சி. அரசிறைவன் சாமி. தவிடன், தென்னவன்கோ, துரை. திருஞானம், சே. கருப்பையன் ஆகியோர் உரையாற்றினர். இறுதியில் திரு. முத்து. உத்திராபதி நன்றியுரை கூறிட விழா இனிது நிறைவுற்றது.

(முன் பக்கத் தொடர்ச்சி)

தான் அக்குழந்தைகளைப் பற்றிய பொதுவான மதிப்பீட்டை அளிக்க முடியும். ஒரு குழந்தை குறிப்பிட்ட கேள்விக்கான விடையைத் தனியாகவும் அளிக்க முடியாமல், மற்றொரு முதியவரது உதவியுடனும் அளிக்க முடியாமல் போனால், அப் பொழுது தான் அக் குழந்தையின் மனவளர்ச்சி குன்றியுள்ளது என்று நாம் கூற முடியும். ○

கொடுத்து வருபவன். தென்மொழி 23, ஓலை 3-இல் ஓவியர் அ. மோகன் க. மு., கல்.இ. (1201) எழுதிய மடலுக்கு, விடையாக ஒரு சில கருத்துகளை எடுத்துரைக்கிறேன்.

தாய்மொழிப் பற்றுடையார், தமிழாசிரியராகத்தாம் இருக்க வேண்டுமென்பதில்லை. எத்துறையாளராக இருந்தாலும், தாய்மொழிப் பற்றுடையராகவேயிருப்பர், தமிழகத்தைத்தவிர! இந் நிலையில் தமிழாசிரியர்கள் ஒரு சிலராகிலும், மொழிப்பற்றுடையவராக இருக்கும்போது, தமிழாசிரியர்களைக் கொச்சைப் படுத்துவது அழகன்று; அரைகுறை ஆங்கிலம் படித்துப் பட்டம் பெற்றவர்கள் (ஆசிரியர்கள், அலுவலர்கள்) தமிழ் மொழிப் பற்றில்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழகத்தில், தமிழாசிரியர்களை விழிப்புணர்ச்சியுடையவராக மாற்றுவது நம் போன்றோர் பணியாகும். மேலும் இடைநிலை ஆசிரியர்கள், சிறப்புநிலை ஆசிரியர்கள், தமிழ்ப்படித்துத் தமிழாசிரியர்களாகப் பணி உயர்வு பெற்றவர்களால், குமுகாய அமைப்பு, தமிழ் மொழியின் அடிப்படை அறிவு கெட்டு வருவதுபோல் சலிப் படைந்து கொண்டு எழுதுகிறார். அன்பரின் கருத்துப்படி பார்த்தால், தமிழைப் படிக்க வருகிறவர்களை, முளையிலேயே கிள்ளி எரிந்து விடுவார் போல் தெரிகிறது...

இடைநிலை ஆசிரியர்கள் பெரும்பாலும் தமிழ்பயின்றதற்குக் கரணியம், புலவர் பட்டம் பெற்றவுடனேயே, கல்வி இளவல் பயிற்சிக்குச் செல்லாமல் உடனடியே தமிழாசிரியராகச் செல்லக் கூடிய வாய்ப்பு, இருந்தமையால்தான்! இராசமாணிக்கனர், மு. வ., இலக்குவனர் முதலியோர் கீழிருந்து மேல்நிலைக்கு வந்தவர்கள்தாமே. தமிழ் மொழி பற்றிய அடிப்படைக் கருத்துகள், மாணவர்களுக்குத் தெரியாமல் இருப்பதற்குக் கரணியம் தமிழாசிரியர்களாக மாறிய இடைநிலை ஆசிரியர்கள், சிறப்பு நிலை ஆசிரியர்கள்தாம், என்று குறிப்பிடுவது அறியாமையே, என்று கருதுகிறேன். ஆங்கில மோகமும், வடமொழித்தாக்கமும், இந்தித்திணிப்பும் அடிமைப் படுத்தியிருக்கும் போது, தமிழின் உயர்வை மாணவர்கள், எவ்வாறு அறிய இயலும்? பாவாணர் நூல்களாகிய இருபத்தைந்துள் ஒரு நூலைப் பயின்றாலும் எந்தத் துறைத் தமிழரும் செத்தமிழ்ப் பற்றாளராவது ஒருதலை. இதை உணராது நண்பர் அவர்கள், தவறான கருத்துகளை நவில்வது நல்லதன்று. அன்புள்ள, —ப. தமிழ்நம்பி, திருவாரூர்.

ு: *1215:* ஐயா! வணக்கம்! சுவடி *33*, ஓலை 3-இல் “விளம்பரங்கள் பொய் முகங்கள்” என்ற கட்டுரை (புதிய கலாச்சாரத்திலிருந்து எடுத்து வெளியிடப் பட்டது) சிறப்பாக இருந்தது. உலகச் செய்திகள் பற்றிய கட்டுரைகளையும் வெளியிடுவது இதழின் சிறப்பை உயர்த்தும். நன்றி.

—காரை. தமிழ்முடி, க. மு., மெய். மு., அண்ணாமலை நகர்.

ு: *1216:* வணங்குதலுக்குரிய, தமிழ்த்திரு அய்யா, தமிழினங்காக்கவும், தமிழ்நலம் பேணவும் “யாம், யாம்!” என, இற்றை நாளில் மிக்குவாய்ப் பல்லோர் புறப்பட்டும்- புறப்பாட்டுப் பாடியும், வருதலைக் கண்டு மகிழ்வின் முகடேறி நெஞ்சப் கூத்தாடினும்—அது நிலைப்பதே இல்லை.

‘தமிழ் காக்க, சரியான-முறையான சாலையில் செல்வோர், யாம்! வருக எம் பின்’, எனக் கழகம், குழுமம், ஆயம் என, அமைந்தோர் யாவரும் தமிழ் வணிகரோ...தமிழ்த் தேர்வில் வெற்றி கண்டவரோ...என்று எண்ணவும் எண்ணி நெஞ்சு நொந்து துடிக்கவும், இற்றைத் தமிழ்ப்பற்றாளர் பல்லோர் தாம் சாற்றலே தகுமிகு மேலாம் என விளக்கவுரை அள்ளித் தருவதும்- அதிலும் அள்ளித் தெளித்து இரைப்பதுமாய்க் கிடக்கின்றனர்.

யாண்டும், எந் நாட்டவரும் தம் மொழியைத் தாய்மொழி என்றே விளிப்பர். இலக்கண வலுவிலா ஆங்கிலமாயினும் இலக்கண—இலக்கியத் தெளிவிலா வடமொழி—அதன் வால் மொழி இந்தியாயினும் அதனதன் மக்களால் தாய்மொழிகளென்று விளித்தலை உலகறியும்.

அப்படி இருக்கக் கடந்த திங்கள் (தந்தை) பெரியார் மாவட்டம், ஈரோட்டிலிருந்து வெளிவரும் 'குறளியம்' திங்களேட்டின்கண் அதனாசிரியர், 'இனித் தமிழினைத் தாய்மொழி என விளிக்க வேண்டா! 'மனைவி மொழி!' என்று விளிப்போம்-எழுதுவோம்' என்று, கட்டுரை சாற்றி, விளக்கந்தருகையில்,...

'நம் மனைவிக்கு நாம்தானே அனைத்தையும் செய்தல் வேண்டும். பிறரா செய்வர்? பிறர் செய்ய ஒப்புவமா? நம் மனைவியை நாம் காத்தலைப் போலத் தமிழைக் காப்போம்—தமிழை இனி மனைவி என்போம்!' என்றெல்லாம், எழுதியிருப்பது...எம்போன்று, தமிழன்பர் நெஞ்சில் முள்மிதியடியால் மிதித்து விளையாடியதாகவே என்னல் வேண்டியுள்ளது.

முந்து தமிழ்ப் புலவோர் பல்லோர் தமிழைத் தாயாகவே சுட்டிய நல்லறிவு நமக்குப் போதும். புதுமை எனும் புனைவில் தமிழின முரண்பாடுகளான விளக்கம் வன்மையான கண்டனத்திற்குரியது. அறிவார் கண்டிப்பர். தமிழிற்கும்—தமிழனுக்கும், எதிர்ப்பும்—எதிரிகளும் தமிழனால்தானே தோன்ற இயலும். அதே தமிழன் நம்முடன் அல்லது அவருடன் நாமும் ஒருவருக்கொருவர் நோக்கி வாழ்தலால் அவர் பொருட்டுத் தமிழன் தாளடிபற்றி, 'தமிழே! தாயே!! எம்மை மன்னிக்க!' என்று இறைஞ்சுவோம். —கருவூர் அன்பரசர், திருச்சி.

○: *1217:* பெருமதிப்பிற்குரிய ஐயா அவர்களுக்கு, அறவாழியின் வணக்கங்கள். தென்மொழி, சுவடி 23, ஓலை 3-இல் 'நமக்கு வந்த மடல்கள்' பகுதியில் புலவர். கு. தெய்வசிகாமணி அவர்கள், நான், 'தங்களுக்கு ஒரு கண்; கழகத்திற்கு ஒரு கண்' எனக் கொண்டு பணியாற்றுவதாகக் கூறியுள்ளது, என்பால் கொண்டிருக்கும் அன்பால் என எடுத்துக் கொள்ள வேண்டுகிறேன். எனக்கு இரு கண்களும் தாங்கள்தாம்!

தி. க.-வின் போக்கு பிடிக்கவில்லை என்பதற்கு முன், தி. க. தோழர்களே என்னையும் உள்ளம் நோகச்செய்து தி. க. வின்பால் நாட்டமின்றிச் செய்து விட்டார்கள் என்பதைப் புலவரவர்கள் அறியார். ஆகவே என்னைப்பற்றிக் குறித்துள்ள செய்தியைப் பொருட்படுத்த வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறேன். தங்கள் அன்புத்தொண்டன். —ப. அறவாழி, உடுமலை.

○: *1218:* அய்யா வணக்கம். 10-4-87 'தமிழ்நில'த்தில் 'இராமாயண நாடகம்' எனும் தலைப்பில் ஆசிரியர் 'ஆரியர்-திராவிடர்' என்பதெல்லாம் பொய் என்று கூறுபவரைக் கடுமையாகக் கண்டிக்கிறார். உள்ளே 'விடுதலை வேட்பன்' 'திராவிடர்' என்று சொல்லிக் கொண்டிருக்கும் மாயையிலிருந்து மீண்டாக வேண்டும்' என்று கட்டுரை எழுதுகிறார்! தமிழ்நிலத்தில் (கட்சியில்தான்) இரண்டு கோட்பாடா? ஒரு பட்டிமன்றம் உங்களுக்குள் வையுங்கள். நீங்கள் பேசி முடிவு செய்துவிட்டுப் பின் 'தமிழ், நிலத்தில்' எழுதுங்கள். உங்களுக்குள் (ஒரே இயக்கத்துள்) இரண்டு 'பெரிய கொள்கை வேறுபாடு'! அப்படியிருக்க நீங்கள் தமிழர்களைத் திருத்தப் புறப்பட்டுவிட்டீர்கள்!

—இலால்குடி. க. நாகராசன், திருச்சி-13.

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600005. (தமிழகம்)